வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu
வார மலர்




Email : news@eelanadu.lk | மலர் : 06 | 20.04.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 111 | பக்கங்கள் : 16

# பிள்ளையானின் வாக்குமூலத்தால் பல்வேறு இரகசியங்கள் அம்பலம்!

## பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தகவல்



கொழும்பு, ஏப். 20

**தற்போது தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்கியுள்ள வாக்குமூலங்களின் அடிப்படையில் பல்வேறு இரகசியங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளதாக பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பிள்ளையானிடம் இருந்து பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில், 2019 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுடன் அவருக்கும் தொடர்பு இருப்பது ஓரளவு தெரியவந்துள்ளது என்றும் பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குற்றப்புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களை பார்வையிடுவதற்கு, கடந்த அரசாங்கங்களின் காலத்தில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

15

# இனவாதம் தலைதூக்க ஒருபோதும் இடமில்லை

## தலவாக்கலையில் ஜனாதிபதி

கொழும்பு, ஏப். 20

அரசியல் செய்யும் உரிமை மற்றும் கருத்து சுதந்திரம் என்பதை மதிக்கின்ற அதேவேளை இனவாதம் தலைதூக்க ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டம் தலவாக்கலையில் நேற்று நடைபெற்றது.

15

# நான்காவது மீளாய்வு தொடர்பில் இலங்கை-நாணய நிதியம் பேச்சு

கொழும்பு, ஏப். 20

விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் நான்காவது மறுஆய்வு குறித்து, இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் அதிகாரப்பூர்வமாக ஆரம்பித்துள்ளன.

பேச்சுவார்த்தைகள் தற்போது அமெரிக்காவின் வாசிங்டனில் இடம்பெற்று வருகின்றன.

இலங்கையின் நிதி அமைச்சு மற்றும் மத்திய

15

# ஜனாதிபதியின் உரையை விமர்சிக்க தமிழ் கட்சிகளுக்கு அருகதையில்லை!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க காட்டம்



கொழும்பு, ஏப். 20

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் உரையை விமர்சிக்க தமிழ் மக்களை ஏமாற்றிய தமிழ்க் கட்சியினருக்கு எந்த அருகதையும் கிடையாது என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்-

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வடக்கில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் ஆற்றிய உரைகளைத் தமிழ்த் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர். ஜனாதிபதியின் உரையை விமர்சிக்கத் தமிழ் மக்களை ஏமாற்றிய தமிழ்க் கட்சியினருக்கு எந்த அருகதையும் கிடையாது.

15

# இன விடுதலை என்ற இறுதி இலக்கினை அடையும்வரை நாம் ஓயப்போவதில்லை!

## சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஏப். 20

தியாகத்தாய் அன்னை பூபதியினதும், தியாக தீபம் திலீபனதும் அகிம்சைப் போராட்டங்களாலும், அதன்பின்னரான ஆயுதப் போராட்ட காலத்திலும் நிகழ்த்தப்பட்ட உயிர்த் தியாகங்களின் உந்துதலால் உருப்பெற்ற, விடுதலைக்கனலின் வீரியம் குறைந்துவிட்டதாக, எமது மக்களின் விடுதலை தாகத்தை மலினப்படுத்துவோர் மார்தட்டிக் கொண்டாலும், இனவிடுதலை என்ற இறுதி இலக்கை அடையும் வரை தியாகங்களால் கட்டமைக்கப்பட்ட எங்கள் அறப்போரின் வீரியம் ஒருபோதும் ஓயப் போவதில்லை என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில், மாவட்டக் கிளைப் பணிமனையில் நேற்று உணர்வெழுச்சியோடு நடைபெற்ற அன்னைபூபதியின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தலில்

15

# ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகளை விரைவில் சட்டத்தின் முன்நிறுத்துவோம்

## அமைச்சர் விஜித ஹேரத் உறுதி

கொழும்பு, ஏப். 20

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிகள் விரைவில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜா-எல பிரதேச சபைக்கென போட்டியிடும் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் பட்டுவத்த பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளினால் சிலர் பதற்றமடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

(அ)

# வடக்கு மக்களின் வாக்கை பெறும் நாடகமே பிள்ளையானின் கைது!

## ராஜித சேனாரத்ன குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 20

புலம்பெயர் ஈழத்தமிழர்களை மகிழ்ச்சிப் படுத்த வேண்டுமெனில் கருணா அம்மான் மற்றும் பிள்ளையான் தண்டிக்கப் படவேண்டும். வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கம் அரங்கேற்றியிருக்கும் நாடகமே பிள்ளையானின் கைதாகும் என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

களுத்துறை பிரதேசத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கருணா

15

அன்னை பூபதி நினைவாக

# பிரிட்டன் பிரதமர் அலுவலகம் முன் நேற்று உண்ணாவிரதப் போராட்டம்

லண்டன், ஏப். 20

தியாகதீபம் அன்னை பூபதியின் 37ஆவது நினைவு நாளை நினைவு கூரும் முகமாக, பிரித்தானியாவில் உண்ணாவிரத போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த உண்ணாவிரத போராட்டமானது நேற்று லண்டனின் மையப் பகுதியில் அமைந்துள்ள டவுனிங் வீதி 10ஆம் எண்ணிலுள்ள பிரதமர்

15

# ஜனாதிபதி அநுர வெளியிட்ட கருத்து; தேர்தல் ஆணைக்குழுவில் முறையீடு

கொழும்பு, ஏப். 20

உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்தல் தொடர்பில் ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மைத்ரி குணரத்ன தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்ததைத் தொடர்ந்து,

15

ட்ரம்ப் விதித்த வரி குறித்து பேச

# அமெரிக்கா சென்றது இலங்கை தூதுக் குழு!

கொழும்பு, ஏப் 20

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பால் அண்மையில் விதிக்கப்பட்ட வரிகள் தொடர்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபட இலங்கையின் தூதுக் குழு ஒன்று அமெரிக்காவுக்கு புறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பேச்சுவார்த்தை ஏப்ரல் 22ஆம்

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னை பூபதியின் 37 ஆவது ஆண்டு நினைவு தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது. (படங்கள்:- கஜிந்தன்)

# தேர்தல் சட்டத்தை மீறிய 20 வேட்பாளர்கள் கைது!

## 154 முறைப்பாடுகள் இதுவரை பதிவு

கொழும்பு, ஏப். 20

**எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் இதுவரை (மார்ச் மாதம் 03 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி) 198 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்றுத் தெரிவித்துள்ளது. இதேவேளை, 20 வேட்பாளர்கள் உட்பட 88 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 154 முறைப்பாடுகளும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 44 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

மேலும், இந்தக் குற்றங்கள் தொடர்பில் 20 வேட்பாளர்களும் 68 சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு, 16 வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# உள்ளூராட்சி தேர்தல் குறித்து இதுவரை 1712 முறைப்பாடுகள்

கொழும்பு, ஏப். 20

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இதுவரை (மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி) 1,712 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 09 முறைப்பாடுகளும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 1,577 முறைப்பாடுகளும் ஏனைய விடங்கள் தொடர்பில் 126 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# உணவு கையாள்பவர்களுக்கான விழிப்புணர்வும் தடுப்பூசி ஏற்றலும்

யாழ்ப்பாணம், ஏப். 20

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதியில் உணவு கையாள்பவர்களுக்கான விழிப்புணர்வு மற்றும் நெருப்புக்காய்ச்சலுக்கான தடுப்பூசி ஏற்றலும் நேற்றுக்காலை நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றது.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி எஸ். ஜெபரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் என். நிர்மலானானந்தம் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டனர்.

இதில் திருநெல்வேலி, கோண்டாவில், கொக்குவில், நல்லூர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளிலிருந்து உணவு கையாள்வோர் கலந்து கொண்டனர்.

உணவகங்களை உரிய சுகாதார முறைப்படி இயக்குவது தொடர்பில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் உணவு கையாளும் நிலையங்கள் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் தெரிவிக்கப்பட்டது.

பல தடவைகள் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டும் சில உணவகங்கள் தொடர்ந்தும் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்குவது தொடர்பிலும் விசனம் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், உணவு கையாள்பவர்களுக்கான நெருப்புக் காய்ச்சல் தடுப்பூசி ஏற்றப்பட்டது. இதில், 250 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டதுடன் 235 பேர் தடுப்பூசி ஏற்றிக் கொண்டனர். (எ-02)

# சங்கிலியன் சனசமூக நிலையம் வெற்றி கிண்ணத்தை சுவீகரித்தது



யாழ்ப்பாணம், ஏப். 20

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஆண்டு தோறும் நல்லூர் சங்கிலியன் சனசமூக நிலையத்துக்கும் திருநெல்வேலி வாலை அம்மன் சனசமூக நிலையத்துக்கும் இடையே துடுப்பாட்டப் போட்டி நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக கடந்த 14 ஆம் திகதி புதுவருட தினத்தன்று செங்குந்த இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் சங்கிலியன் சனசமூக நிலையம் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது.(எ)

# தமிழ் மத்திய மகா வித்தியாலயம் உதைபந்தாட்டத்தில் சம்பியனானது



வவுனியா, ஏப். 20

வவுனியா மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கம் நடத்திய அமரர் சௌந்தர நாயகம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயமும் பெண்கள் பிரிவில் நெளுக்குளம் மகா வித்தியாலமும் வெற்றி வாகை சூடியது.

கடந்த இரு தினங்களாக இடம்பெற்று வந்த இந்தச் சுற்றுப்போட்டியில் இறுதி நாள் நிகழ்வு வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

பரபரப்பான இறுதிப்போட்டியில்

ஆண்கள் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயமும் பெண்கள் பிரிவில் நெளுக்குளம் மகா வித்தியாலயமும் வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றியது.

வெற்றிபெற்ற அணிகளுக்கான வெற்றிக்கேடயங்கள் விருந்தினர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

சங்கத்தின் இணைப்பாளர் இ. சற்சொரூபன் தலைமையில் இடம்பெற்ற இப்போட்டிகளில் வவுனியா தெற்கு வலய


ஆசிரிய ஆலோசகர் விஷ்ணு, யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத் தலைவர் பாபு, அனுசரணையாளர் சார்பில் சௌந்தரநாயகம் பிரதாபன் மற்றும் ரவீந்திரன், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் அமலன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஏ-10)

# பாட்டி சொன்ன கதைகள் சிறுவர் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப்.20

சுழிபுரம் கே. ஏ. எஸ். சத்தியமனை நூலகத்தின் வெளியீடான வள்ளியம்மை சுப்பிரமணியத்தின் 'பாட்டி சொன்ன கதைகள்' சிறுவர் நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 04.00 மணியளவில் சுழிபுரத்தில் அமைந்துள்ள கே.ஏ.எஸ். சத்தியமனை நூலகத்தில் நடைபெறவுள்ளது. விசேட சிறுவர் கலை நிகழ்வுடன் இடம்பெறவுள்ள இந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ஏ)

# யாழில் நூல் வெளியீட்டு நிகழ்வு



யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ். கிராமிய உழைப்பாளர் சங்கம், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் இணைந்து ஏற்பாடு செய்த மரியநாயகம் நியூட்டன் எழுதிய 'காட்டிக் கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்' நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்றுக் காலை யாழ். மாவட்ட செயலகம் அருகிலுள்ள வை. எம். சி. ஏ. மண்டபத்தில் யாழ். கிராமிய உழைப்பாளர் சங்க தலைவர் என். இன்பம் தலைமையில் நடைபெற்றது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அமைப்பாளரும் உலக மீனவ சம்மேளனத்தின் பொதுச்செயலாளருமான ஹேமன் குமார, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தனர்.

வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அ. அன்னராசா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செ. கஜேந்திரன் உள்ளிட்ட பலரும் இதில் கலந்துகொண்டனர். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நோக்கங்களை தள்ளிவைத்து உண்மையைக் கண்டறிய அணிதிரள்க!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 20

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வீண் பேச்சுக்களைத் தவிர்த்து நீதியை நிலைநாட்ட, உண்மையைக் கண்டறிய அனைவரும் ஒன்றிணைவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் அழைப்பு சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்துள்ளார்.

தேர்தல் காலத்தில் பல்வேறு தரப்பினரும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவதாக கூறினாலும் அதிகாரத்தைப் பெற்ற பிறகு எந்த ஆட்சியாளரும் இவர்களுக்குரிய நீதியை வழங்க விரும்பவில்லை என்பது இன்றும் தெளிவான உண்மையாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கடவுளின் குமாரனாகக் கருதப்படும் இயேசு கிறிஸ்து மரணத்தை வென்று உயிர்த்தெழுந்ததை நினைவுகூரும் வகையில், உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்களைப் போலவே, நமது நாட்டிலுள்ள கிறிஸ்தவர்களும் ஈஸ்டர் தினத்தை உற்சாகத்துடன் கொண்டாடுகின்றனர்.

இயேசு கிறிஸ்து மனித இதயத்தில் உள்ள இருளை அகற்றி, புதிய நம்பிக்கையை வழங்கி, மனித வாழ்க்கையை மாற்றும் திறனை வெளிப்படுத்தியது இதன் சிறப்பம்சமாகக் கருதலாம். ஆனால், 2019 ஏப்ரல் 21ஆம் திகதி ஈஸ்டர் தினத்தன்று நமது நாட்டில் கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் சில ஹோட்டல்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட மனிதாபிமானமற்ற தற்கொலைத் தாக்குதலால் இன்றும் நமது நாட்டின் கத்தோலிக்க மக்கள் பெரும் துயரத்தில் உள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்குப் பிறகு, அதைப் பயன்படுத்தி அரசியல் அதிகாரத்தைப் பெற்ற சில அரசியல் கட்சிகளின் கீழும், தற்போதைய அரசாங்கத்தின் கீழும், இந்தத் தாக்குதலின் சூத்திரதாரிகளுக்கு உரிய தண்டனை வழங்க முடியாததால், 6 ஆண்டுகள் கடந்தும், இந்தத் தாக்குதலில் உயிரிழந்த, கைகால்களை இழந்த, உறவினர்களையும் நண்பர்களையும் இழந்த மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்பது தெரிகிறது.

எனவே, வீண் பேச்சுக்களையும் பொய் வாக்குறுதிகளையும் தவிர்த்து, தாக்குதலால் பாதிக்



கப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் நீதி கிடைக்க அனைவரும் செயல்பட வேண்டும்.

குறுகிய அரசியல் நோக்கங்களையும், பிற்போக்குத்தனமான போக்குகளையும் கடந்து, அனைவரும் ஒன்றிணைந்து நாடாக நல்ல எதிர்காலப் பயணத்துக்காக அணிதிரள வேண்டுமென இறுதியாக அனைவரிடமும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன் என்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)



# அன்னை பூபதியின் 37ஆவது நினைவுதினம்

வவுனியா, ஏப். 20

வவுனியாவில் அன்னை பூபதியின் 37ஆவது நினைவு தினம் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினால் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த சங்கத்தினர் தொடர் போராட்டம் மேற்கொண்டு வரும் வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாகவுள்ள கொட்டகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, அன்னையின் திருவுருவ படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.


இது தொடர்பில் கருத்து தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினர்,

தமிழ் மக்களின் இறைமையை பாதுகாப்பதற்காகவும், உரிமைகளுக்காகவும் தன்னை அர்ப்பணித்த அன்னைக்கான அஞ்சலியை தமிழர் தேசம் செலுத்திக்கொண்டிருக்கிறது.

தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்ட விடயத்தை சர்வதேச பொறிமுறையூடாக, சர்வதேச மத்தியஸ்தத்தின் ஊடாகவே தீர்க்க முடியும். குற்றவாளிகளே பிரச்னையை தீர்ப்பது நீதியாக அமையாது.

அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தீர்வைப் பெறுவதற்கு இறையாண்மை அவசியமானது. அதனை நோக்கியே எமது போராட்டங்கள் அமைந்துள்ளன. இறையாண்மை எமக்குத் தேவை என்பதை எதிர்காலத்திலும் தொடர்ச்சியாக சர்வதேசத்துக்கு உரத்துச்சொல்வோம்- என்றனர். (எ-10)

# தேவாலயம்மீது துப்பாக்கிச் சூடு



பொலநறுவை, ஏப்.20

பொலநறுவை, மன்னம்பிட்டி பகுதியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் மீது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்தியவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மன்னம்பிட்டி பிரதான வீதியில் வசிக்கும் 38 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த தேவாலயத்தின் மத போதகருடனான தனிப்பட்ட பிரச்னை காரணமாகவே இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவருவதாக பொலிஸார் கூறினர்.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டபோது உள்ளே எவரும் இருக்கவில்லை என்றும், தேவாலயத்தின் ஜன்னல் கண்ணாடிகள் மீதே துப்பாக்கி தோட்டாக்கள் பாய்ந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## தண்டவாளத்தில் உறங்கிய

# கடவை மேற்பார்வையாளர் ரயில் மோதி உயிரிழந்தார்!

பதுளை, ஏப். 20

பெரகும்புர - அம்பேவளை ரயில் நிலையங்களுக்கு இடையில் உள்ள ரயில் கடவையில் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்ததாக பட்டிபொல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை 04:15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் பதுளை, தியத்தலாவ பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞன் ஆவார்.

இவர் கொழும்பிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த ரயிலில் மோதியே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் குறித்த ரயில் கடவையின் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வந்த நிலையில் தண்டவாளத்தில் உறங்கியதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் அதே ரயிலில் ஏற்றப்பட்டு அம்பெவெல ரயில் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பட்டிபொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# போதைப்பொருட்களுடன் ஒரே நாளில் 241 பேர் கைது

கொழும்பு, ஏப். 20

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருட்களுடன் 241 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்றுத் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஹெரோயின் போதைப்பொருளுடன் 92 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 75 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 70 பேரும், ஹேஷ் போதைப் பொருளுடன் ஒருவரும், குஷ் போதைப்பொருளுடன் 03 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, 91 கிராம் 890 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும், 131 கிராம் 220 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், 02 கிலோ 96 கிராம் கஞ்சா போதைப்பொருளும், 2 கிராம் ஹேஷ் போதைப்பொருளும், 05 கிராம் 248 மில்லிகிராம் குஷ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# தென்னைகளை சேதப்படுத்தி காட்டு யானைகள் அட்டகாசம்

வவுனியா, ஏப். 20

வவுனியா, புளியங்குளம் கிராமத்துக்குள் நுழைந்த காட்டு யானைகள் காய்க்கும் நிலையிலிருந்த பெருமளவு தென்னைகளை சேதப்படுத்தியுள்ளன.

குறிப்பாக, வேலங்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட மடுக்குளம்

கோவில்மோட்டை, செங்கற்படை, சின்னத்தம்பனை சிவநகர், குஞ்சுக்குளம், கோவில் புளியங்குளம் போன்ற கிராமங்களுக்குள் அண்மைய நாட்களில் தொடர்ச்சியாக செல்கின்ற காட்டு யானைகள் விவசாய நிலங்கள் மற்றும் தோட்டப்பயிர்களைச் சேதப்படுத்தியுள்ளன.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில் தமக்கான தீர்வை எந்தவொரு அதிகாரிகளும் இதுவரை முன்வைக்கவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

எமது கிராமத்தை சுற்றி யானை தடுப்பு வேலியை அமைத்துத் தருமாறு பல்வேறு தரப்பிடமும் கோரிக்கை விடுத்துள்ளோம். ஆனால், இதுவரை எந்தவித பதிலும் கிடைக்கவில்லை என அந்தக் கிராம மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (எ-10)

# பொலிஸ் வாகனத்தில் பயணித்த ஆசிரியை தொடர்பில் விசாரணை

கொழும்பு, ஏப். 20

ஆசிரியை ஒருவர் பொலிஸ் மோட்டார் சைக்கிள் மற்றும் காரில் பயணிக்கும் காணொலிகள் சில சமூக ஊடகங்களில் பரவி வரும் நிலையில், இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மேலதிக வகுப்புகளை நடத்தி வரும் ஆசிரியை ஒருவரே இவ்வாறு பொலிஸ் வாகனங்களில் பயணித்துள்ளார்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் திரைப்பட காட்சிகளுக்காக தனியார் நிகழ்ச்சிகளின் பாதுகாப்புக்காக பொலிஸ் வாகனங்கள் வாடகைக்கு வழங்கப்படும்.

இவ்வாறு தரம் - 5 புலமைப் பரிசிலுடன் தொடர்புடைய தனியார் நிகழ்ச்சி ஒன்றுக்காக பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் சிலரின் கோரிக்கைக்கு இணங்க பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பொலிஸ் வாகனங்கள் சில அண்மையில் வாடகைக்கு வழங்கப்பட்டன.

இதன்போது, ஆசிரியை ஒருவர் தனிப்பட்ட பிம்பத்தை உருவாக்குவதற்காக பொலிஸ் வாகனங்களில் பயணிப்பதை காணொலிகளாக எடுத்து சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ளார்.

எனவே, தனிப்பட்ட தேவைக்காகவும் பணத்துக்காகவும் தனிநபர்களுக்கு பொலிஸ் வாகனங்கள் வழங்கப்படவில்லை.

இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜபக்ஷ குடும்பத்தினரை சாடாது

# உலகளாவிய வர்த்தக சரிவு குறித்து அநுர கவனம் செலுத்த வேண்டும்!

அநுராதபுரம், ஏப். 20

**தேர்தல் பிரசார மேடைகளில் ராஜபக்ஷ குடும்பத்தினரை சாடாது ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க உலகளாவிய வர்த்தக சரிவு தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும் என்று சிறீலங்கா பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம். பி. தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல் பிரசாரங்களின் போது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாகக் கூறி, உள்நாட்டு யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டுவர காரணமாக இருந்தவர்களை கைது செய்து உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியை கைது செய்துள்ளதாக அரசாங்கத்தினர் காண்பிக்க முயற்சிக்கின்றனர் என்றும் அவர் சாடியுள்ளார்.

அநுராதபுரம் நொச்சியாகம பகுதியில் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுடன் நேற்று முன்தினம் கலந்துரையாடிய தன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே நாமல் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அநுர அரசாங்கம் எவ்வாறான விடயங்களை கூறினாலும் இறுதித் தீர்மானம் மக்களுடையது. தமக்கு வாக்களிக்காது விடின் நிதி வழங்கமாட்டோம் என அரசாங்கம் பொது மக்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கிறது. அதேநேரத்தில் இந்தியாவுடன் எமது நாட்டு பாதுகாப்புத் தொடர்பில் பொதுமக்கள், ஊடகங்கள் மாத்திரமல்ல பாராளுமன்றத்துக்குக் கூட அறிவிக்காமல் இரகசிய ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் உள்ள 159 உறுப்பினர்களுக்கும் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் மற்றும் அதன் விளைவுகள் குறித்து எவ்விடயமும் முழுமையாக தெரியாது.

அமெரிக்காவின் தீர்வை வரி விதிப்புக்கு பின்னர் உலக பங்குச்சந்தை கடும் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், உலக அரசியலிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆகையால் நிலைமையைக் கருத்தில் கொண்டு வெளிநாடுகளுடன் மேற்கொள்ளும் வர்த்தகம் தொடர்பில் உலக நாடுகள் புதிய இணக்கப்பாடுகளை எட்ட தயாராக உள்ளன. சீனா, இந்தியா மற்றும் சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்கள் பிற நாட்டு தலைவர்களை சந்தித்து வர்த்தகம் தொடர்பில் கலந்துரையாடுகின்றனர். எனினும், எமது நாட்டு ஜனாதிபதி அநுர, நாடு முழுவதும் உள்ள தேர்தல் மேடைகளில் எம்மைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்.

எவ்வாறாயினும் இதற்கு முன்னர் 1987 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இந்து - லங்கா ஒப்பந்தம் முழுமையான பலனைத் தரவில்லை. இந்தியாவுடன் இருந்த பகையை மறந்து அபிவிருத்தி சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதால் எமக்கு எவ்வித பிரச்னையும் இல்லை. எனினும், வெளிப்படைத்தன்மை இன்றி பொது மக்களுக்கு அறிவிக்காது மேற்கொள்ளப்படும் இரகசிய ஒப்பந்தங்களை ஒரு காலமும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இம்முறை நாட்டில் உள்ள அனைத்து தேவாலயங்களுக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். தாக்குதல் இடம்பெறும் என்பதை அறிந்திருந்தோம் எனினும் உயிர்த் ஞாயிறு அன்று இடம்பெறும் என்பதை நாம் அறிந்திருக்கவில்லை என்று தமது கடமைகளை புறக்கணித்த அதிகாரிகளுக்கே தற்போது பொதுமக்களைப் பாதுகாக்கும் உயர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன"- என்றார்.

(எ)

## உணவருந்த சென்றவர்களை தாக்கிய 11ஹோட்டல் ஊழியர்களுக்கு மறியல்

காலி, ஏப்.20

காலியில் உள்ள ஹோட்டலொன்றில் உணவருந்த சென்ற சிலரை தாக்கிய சந்தேகத்தில் அந்த ஹோட்டலின் 11 ஊழியர்களை கைது செய்து எதிர் வரும் 28 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதி புதன் கிழமை இரவு உணவு பெற்றுக்கொள்வது தொடர்பாக ஹோட்டல் ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறியது.

கொழும்பைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞனும் 14 மற்றும் 17 வயதுடைய சிறுவர்கள் உட்பட மொத்தம் ஆறு பேர் இந்தத் தாக்குதலில் காயமடைந்த நிலையில் காலி தேசிய மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

விசாரணைகளை தொடர்ந்து தாக்குதலுடன் தொடர்புடைய 11 சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்ததோடு, அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதை தொடர்ந்து ஏப்ரல் 28 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## குஷ் போதையுடன் 3 பெண்கள் விமான நிலையத்தில் கைது!

கொழும்பு, ஏப். 20

இந்தியாவிலிருந்து 6 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான குஷ் போதைப்பொருளை சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டு வந்த மூன்று பெண்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் நேற்றுச் சனிக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 25, 48 மற்றும் 50 வயதுடைய கொழும்பு, வெல்லம்பிட்டிய மற்றும் மாளிகாவத்தை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

சந்தேக நபர்களிடமிருந்து 5. 248 கிலோ கிராம் குஷ் போதைப்பொருளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவர்கள் குறித்த போதைப் பொருளை தாய்லாந்தில் கொள்வனவு செய்து இந்தியாவின் பெங்களூருக்கு கொண்டு சென்றதன் பின்னர், நேற்றுச் சனிக்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பெண்கள், அவர்கள் கொண்டு வந்த போதைப்பொருளுடன், நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

## இரும்புக் கம்பியால் தாக்கி தந்தை கொலை, மகன் கைது

கொழும்பு, ஏப். 20

கொழும்பு - கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒருகொடவத்தை பிரதேசத்தில் இரும்புக் கம்பியால் தாக்கி தந்தையை கொலை செய்த மகன் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் கொலைச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

ஒருகொடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய நபரே கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவதினத்தன்று, தந்தைக்கும் மகனுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

தகராறின் போது சந்தேக நபரான மகன் தனது தந்தையின் தலையில் இரும்புக் கம்பியால் தாக்கியுள்ளார்.

காயமடைந்த தந்தை கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து சந்தேக நபரான 20 வயதுடைய மகன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## காதல் தகராறு; பெண் கொலை சந்தேக நபர் தப்பியோட்டம்

களுத்துறை, ஏப். 20

களுத்துறை மத்துகம - தொலஹேன பகுதியில் இளம் பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதாக மத்துகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை இடம்பெற்றுள்ளது.

கொலை செய்யப்பட்டவர் அங்கலவத்தை மேர்வின் சமரநாயக்க மாவத்தை பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய பெண் ஆவார்.

காதல் உறவால் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்று தலைமறைவாக இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் நாகொடை மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மத்துகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## வாகரையில் விபத்து; குடும்பஸ்தர் மரணம்

மட்டக்களப்பு, ஏப். 20

மட்டக்களப்பு - வாகரை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாங்கேணி புல்லாவி சந்தியில் நேற்றுச் சனிக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் மற்றும் மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவிததனர்.

வாழைச்சேனையைச் சேர்ந்த 40 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் மீன் வியாபாரத்துக்காக வாழைச்சேனை பகுதி யிலிருந்து மாங்கேணி பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் வாழைச்சேனை ஆதார மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## ஹபரணையில் வான் விபத்து; சாரதியும் சிறுவர்களும் காயம்

ஹபரணை, ஏப். 20

அநுராதபுரம் - ஹபரணை பிரதேசத்தில் இடம்பெற்ற வான் விபத்தில் சாரதியும் சிறுவர்களும் காயமடைந்துள்ளதாக ஹபரணை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுச் சனிக் கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து கிண்ணியா நோக்கிப் பயணித்த வான் ஒன்று வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மரத்தின் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது வானில் பயணித்த சாரதியும் சிறுவர்களும் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக தம்புள்ளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபரணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## 'வெல்லே சாரங்க' டுபாயில் கைது!

கொழும்பு, ஏப். 20

பாதாள உலகக் கும்பலின் தலைவரான 'வெல்லே சாரங்க' என அழைக்கப்படும் கமகே சாரங்க பிரதீப் ஹேவத் என்பவர் டுபாயில் வைத்து கைது செய்யப்பட்டதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச பொலிஸாரால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த வெல்லே சாரங்க என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் கொழும்பு முகத்துவாரம் லெல்லம பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கும் வெல்லே சாரங்க என்பவருக்கும் தொடர்பு இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு உதவி செய்ததாக கூறப்படும் வெல்லே சாரங்க என்பவரின் உறவினரான இறைச்சி வியாபாரி மஹபாகே பிரதேசத்தில் சுட்டுக்கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
20.04.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், சித்திரை 07

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஆர்மிடேஜ் - சமாதான காலத்து அமெரிக்கர்

அமெரிக்காவின் முன்னாள் உதவி இராஜாங்கச் செயலர் ரிச்சர்ட் எல். ஆர்மிடேஜ், 79 வயதில் கடந்த வாரம் காலமானார். ஓய்வு பெற்ற பின்னர், 'ஆர்மிடேஜ் இன்ரநேசனல்' என்னும் தனியார் சர்வதேச ஆலோசனை நிறுவனம் ஒன்றை அவர் நடத்தி வந்தார். அவரது மறைவை குறித்த நிறுவனமே உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கின்றது.

அமெரிக்க குடியரசு கட்சியை சேர்ந்தவரான ரிச்சர்ட், அமெரிக்காவின் பல்வேறு ஜனாதிபதிகளுக்குக் கீழ், பல உயர் பதவிகளை வகித்தவரான ஆர்மிடேஜ், வியட்நாம் யுத்த காலத்திலிருந்து, பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் வரையில், அமெரிக்க பாதுகாப்பு கொள்கை வகுப்பில், பிரதான முகமாக இருந்தவர். அமெரிக்க அதிகாரத்தை உலகில் பேணிப் பாதுகாக்கும் விடயத்தில், ரோமர் காலத்து அக்கினி தேவன் என்னும் புனைபெயரால் அழைக்கப்பட்டவர் - எனினும், ட்ரம்ப், குடியரசு கட்சியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட விடயத்தில் முரண்பட்டு, அந்தத் தேர்தலில் ஜனநாயக கட்சியின் வேட்பாளராக இருந்த, ஹிலாரி கிளின்ரனை ஆதரித்தார். இதன் விளைவாக குடியரசு கட்சியின் உயர் அடுக்கிலிருந்து வெளியேறினார்.

இவருக்கும் ஈழத் தமிழர் அரசியலுக்கும் என்ன தொடர்பு? ஒரு முக்கிய தொடர்புண்டு. அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தை வழிநடத்திய முக்கிய கொள்கை வகுப்பாளர்களில் இவர் பிரதானமானவர். அப்போது, அமெரிக்க இராஜாங்கச் செயலராக இருந்த கொலின் பவலுடன் இணைந்து பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்கப் பிரகடனத்துடன், முழு உலகும் நிற்க வேண்டும் என்னும் அடிப்படையில், அமெரிக்க அதிகாரத்தை பிரயோகித்ததில், இவரின் பங்கு முதன்மையானது. கொலின் பவலும் இவரும் வியட்நாம் யுத்தத்தில் பங்கு கொண்டவர்கள்; நண்பர்கள்.

அந்தக் காலத்தில், பாக்கிஸ்தான் ஜெனரலுடன், இவர் உரையாடிய விடயம் சர்சைகளை ஏற்படுத்தியிருந்தது. அதாவது, அமெரிக்காவுடன் ஒத்துழைக்காவிட்டால், பாகிஸ்தானை கற்காலத்துக்கு அனுப்பி விடுவோம், குண்டுகள் தயார் நிலையில் இருக்கின்றது - என்று அச்சுறுத்தியதாக, பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் ஒரு நேர்காணலின்போது, போட்டுடைத்தார்.

விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையின் போது, இலங்கை தொடர்பான அமெரிக்காவின் கொள்கை நிலைப்பாடு இவரது கட்டுப்பாட்டிலேயே இருந்து. 2001 - 2005 வரையான காலப்பகுதியில், அமெரிக்க அதிகாரத்தை ஆசியாவில் பேணிப் பாதுகாக்கும் விடயத்திற்கே, இவர் பிரதானமாக தலைமை தாங்கியிருந்தார். ஆர்மிடேஜ் காண்பித்த பிரத்தியேக ஈடுபாடே, இலங்கையின் மீதான அன்றைய அமெரிக்க ஈடுபாட்டை தீர்மானித்தது.

2003 - 2006 வரையான காலப்பகுதியில், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக இருந்தது ஜெப்ரி லன்ஸ்டட் எழுதிய கட்டுரை ஒன்றில் இந்த விடயங்களை பதிவு செய்திருக்கின்றார். அன்றைய சூழலில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் ஆர்மிடேஜ் 'இலங்கை அலுவலர்' என்று செல்லமாக வர்ணிக்கப்படுமளவிற்கு நிலைமை இருந்ததாக அவர் தனது கட்டுரையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஜக்கிய தேசியக் கட்சியை அதிகாரத்தில் வைத்திருக்க வேண்டும் என்பதில் ஆர்மிடேஜ் பிரத்தியேக ஈடுபாட்டை காண்பித்திருக்கின்றார். இதனையும் குறித்த கட்டுரையில் துதுவர் பதிவு செய்திருக்கின்றார்.

ஆனால் 2005இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது, தமிழ் மக்கள் தேர்தலை புறக்கணிக்க வேண்டுமென்று, விடுதலைப் புலிகள் இயக்கம் கோரியதைத் தொடர்ந்து, சொற்ப வாக்கு வித்தியாசத்தில், அமெரிக்க எதிர்ப்பாளரான, அடிப்படையில் சீன சார்பாளரான மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானார். இந்த விடயம் ஆர்மிடேஜ் தலைமையிலான அமெரிக்க இராஜதந்திர சமூகத்தை அதிருப்திக்குள்ளாக்கியது. அதன் பின்னர் விடயங்கள் அனைத்தும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக வேகமாக நகர்ந்தன.

# பிள்ளையான் உண்மைகளை வெளிப்படுத்துவதை தடுக்க சதி

### சிறப்பு பாதுகாப்பு வழங்க வேண்டும்

கொழும்பு, ஏப். 20

பிள்ளையான் என்பவர் நாட்டில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்கள் தொடர்பில் மிக முக்கிய சாட்சியாளராவார். எனவே, அவற்றை அவர் வெளியிடுவதைத் தடுப்பதற்கு ஒரு குழு முயற்சிக்கின்றது. அவருக்கு சுயாதீன சட்டத்தரணிகள் குழுவையும், சிறப்பு பாதுகாப்பையும் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர வலியுறுத்தினார்.



கடுவலையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்படுவார் என தேர்தல் பிரசாரங்களின் போது தேசிய மக்கள் சக்தி கூச்சலிட்டுக் கொண்டிருந்தது.

ஆனால், அதற்குரிய நடவடிக்கைகள் எவற்றையும் முன்னெடுக்காது சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை அரசாங்கம் பெரிதுபடுத்திக் கொண்டிருக்கிறது.

இவ்வாறான நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்கும் என எவ்வாறு நம்ப முடியும்? பிள்ளையானின் கைது அனைவர் மத்தியிலும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

சட்டத்தை நடைமுறைப் படுத்தும் நிறுவனங்கள் ஏன் இதனை சரியாகக் கையாளவில்லை? உதய கம்மன்பில பிள்ளையானை தேசிய வீரர் எனக் குறிப்பிட்டுள்ளமை தொடர்பில் அரசாங்கம் ஏன் பதிலளிக்கவில்லை?

இது தொடர்பில் விசாரணைகளேனும் முன்னெடுக்கப்பட வேண்டும். பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, பிள்ளையான் இராணுவத்துக்கு உளவுத் தகவல்களை வழங்கியமை பொய் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் ஊடாக இராணுவத்துக்கு எவ்வித நன்மையும் கிடைக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறிருக்கையில் கம்மன்பில போன்றோர் குறிப்பிடும் விடயங்கள் எதிர்காலத்தில் பெரும் பிரச்னைகளை தோற்றுவிக்கக் கூடியவையாகும்" - என்றார். (எ)

# வடமாகாண ஆளுநருடன் ரவிகரன் எம்.பி. சந்திப்பு

### வன்னி காணி பிரச்னை குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஏப். 20

வன்னிப் பகுதிகளில் காணப்படும் காணி விடயங்களிலுள்ள சிக்கல் நிலைமைகள் மற்றும், வன்னிப் பகுதியிலுள்ள சில அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனிடம் எடுத்துரைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பிலேயே து.ரவிகரன் எம்.பி வடக்கு ஆளுநரிடம் இவ் விடயங்களை தெரிவித்தார்.

இந்நிலையில் தம்மால் எடுத்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதாக ஆளுநர் தெரிவித்ததாக ரவிகரன் தெரிவித்துள்ளார்.

மேலும் முல்லைத்தீவு, மன்னார்,வவுனியா மாவட்டங்களில் காணப்படும் சில குறைபாடுகள் தொடர்பாக வடக்கு மாகாண அளுநரிடம் தெரிவித்ததாக குறிப்பிட்ட ரவிகரன் எம்.பி காணி விடயங்கள் குறித்து ஆராய்ந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# தொலைபேசி கம்பத்தோடு வான் மோதியது

வவுனியா, ஏப். 20


வவுனியா பூந்தோட்டம் காத்தார் சின்னகுளம் வீதியில் நேற்று மதியம் தொலைபேசி கம்பத்தோடு வான் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

பூந்தோட்டத்தில் இருந்து மிக வேகமாக சென்ற வான் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதி ஓரமாக இருந்த தொலைபேசி கம்பத்தோடு மோதுண்டு அருகில் இருந்த வீடு ஒன்றின் வேலிகளையும் உடைத்து விபத்துக்குள்ளானது.

இதன் காரணமாக குறித்த வீதியினால் போக்குவரத்து செய்ய முடியாத வகையில் தொலைபேசி கம்பம் முறிந்து காணப்பட்டது.

இந்நிலையில் சாரதி விபத்து இடம் பெற்ற பகுதியில் இருந்து தப்பி ஓடிய நிலையில் வவுனியா பொலிஸார் விபத்து தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# மகிழ்ச்சியுடன் வாழ்வோம்!

இரா.சாந்தகுமார்

பிரிட்டனின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம், ஐநா சபை, அமெரிக்காவின் முன்னணி கருத்துக்கணிப்பு நிறுவனமான கேலப் ஆகியவை இணைந்து உலகின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலை ஆண்டுதோறும் வெளியிட்டு வருகின்றன. அண்மையில் வெளியிடப்பட்டுள்ள இந்த ஆண்டுக்கான பட்டியலில் முதல் இடத்தை ஐரோப்பிய நாடான பின்லாந்து பிடித்துள்ளது. டென்மார்க் இரண்டாம் இடத்தையும் ஐஸ்லாந்து மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளன.

ஒரு நாட்டின் மொத்த பொருளாதார உற்பத்தி, நோயற்ற ஆரோக்கியமான வாழ்க்கை, சுதந்திரம் உள்ளிட்டவற்றின் அடிப்படையில் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. 147 நாடுகள் உள்ள இந்தப் பட்டியலில் இந்தியா 118 -ஆவது இடத்தில் இருக்கிறது.

உள்நாட்டு தீவிரவாதம், அண்டை நாடுகளுடன் போர் போன்றவயும் ஒரு நாட்டு மக்களின் மன மகிழ்ச்சியைச் சிதைக்கும் காரணிகளாகும். மகிழ்ச்சியாக வாழும் மக்கள் உள்ள நாடுகளின் பட்டியலில் முன்னணியில் முதல் 20 இடங்களில் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் உள்ளன. இதற்குக் காரணம், ஐரோப்பிய நாடுகளில், உக்ரைன், ரஷ்யா நாடுகள் தவிர்த்து பிற நாடுகளில் பெரிய அளவில் உள்நாட்டு கிளர்ச்சி, அரசியல் ஸ்திரத் தன்மையின்மை, அண்டை நாடுகளுடன் மோதல் போக்கு ஆகியவை இல்லாததே. விதிவிலக்காக, ஆசிய நாடான இஸ்ரேல் தனது அண்டை நாடுகளுடன் பல ஆண்டுகளாக மோதல் போக்கை கடைப்பிடித்து வருகின்றபோதிலும், அந்நாடு மகிழ்ச்சியாக வாழும் மக்களைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் 8-ஆம் இடத்தில் உள்ளது. இதற்குக் காரணம் அந்நாட்டு மக்களுக்கிடையே உள்ள புரிதலே எனத் தெரியவந்துள்ளது.

அடிக்கடி ஏற்படும் புயல், பூகம்பம் போன்ற இயற்கை சீற்றங்களை எதிர்கொள்ளும் நாடுகளில் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வது அரிது.

வருவாய்க்கேற்ற வகையில் திட்டமிட்டு செலவு செய்து வாழாமல், ஆடம்பரமாக வாழ்ந்து, தங்கள் மகிழ்ச்சியை மட்டுமல்லாது, தற்கொலை செய்வதன் மூலம் வாழ்க்கையையே தொலைத்தவர்கள் பலர். ஆடம்பரமாக வாழ்பவர்கள் எல்லாம் மகிழ்ச்சியாக இருக்கி றார்கள் என நாம் நினைத்தால் அது முற்றிலும் உண்மை அல்ல.

ஆடம்பரம் மிக்க வாழ்க்கைக்கு அவசியத் தேவை அதிகப்படியான பணம் என்பதால், அதனைத் தேடியே இடைவிடாது ஓடிக் கொண்டிருப்பது, அவ்வாறு ஓடும் வேகத்தில் தம் நலன் விரும்பும் பெற்றோர், உறவினர் , நண்பர்களையும் பல சமயங்களில் உதாசீனம் செய்யும் சூழல் உருவாகி விடுகிறது. நமக்கு மனமகிழ்ச்சியைத் தரக் கூடியவர்களை பணயம் வைக்கும் இத்தகைய பணம் தேடும் ஓட்டம், கண்களை விற்று சித்திரம் வாங்குவதற்கு நிகரானதே!

மனதைக் கவரும் விளம்பரங்கள், சுலபத் தவணை முறையில் விற்பனை, கடன் தருவதற்காக காத்திருக்கும் நிதி நிறுவனங்கள் ஆகியவற்றால் அத்தியாவசிய தேவைக்கும் அதிகமானவற்றை வாங்கி குவிக்கும் நுகர்வோர் கலாசாரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இச்சூழல் தற்காலிகமாக மகிழ்ச்சியைத் தந்தாலும், நீண்ட காலத் துயரத்தில் நம்மைத் தள்ளிவிடுகின்றன என்பதே பெரும்பாலான நுகர்வோரின் அனுபவமாக உள்ளது.

எதுவுமே நிரந்தரமில்லாத உலகில் நாம் படும் துயரமும் நிரந்தரமானதல்ல



என்பதை உணர்ந்தாலே மனதுக்கு ஆறுதல் ஏற்பட்டு, மகிழ்ச்சி ஏற்படும் மன நிலை உருவாகும்.

மன அழுத்தத்தைக் குறைத்து, மகிழ்ச்சியை ஏற்படுத்துவதற்காக இயங்கும் நகைச்சுவை மன்றங்கள் கூட ஓரளவே மகிழ்ச்சியை அளிக்கக்கூடியவை. தாங்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை எண்ணிக் கவலைப்படுவதால் எதுவும் மாறி விடப் போவதில்லை எனத் தெரிந்தும், பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான முயற்சியில் ஈடுபடாமல், தம் தலைவிதியென நொந்து துன்பத்தில் உழல்பவர்கள் ஏரா ளம். தீர்வே இல்லாத பிரச்னைகள் ஒரு போதும் இல்லை. ஒரு பிரச்னை உருவா கும்போதே அதற்கான தீர்வும் உருவாகி விடுகிறது. துரதிருஷ்டவசமாக, நம்மில் பலர் பிரச்னைகளை மட்டுமே பார்க்கி றோம். தீர்வுகளின் பக்கம் திரும்பிப் பார்ப் பதில்லை.

பெரும்பாலானவர்களின் மகிழ்ச்சியின்மைக்கு அவர்கள் தம்மைவிட மேலானவர்களோடு தம்மை ஒப்பிட்டு பார்த்துக் கொள்வதே காரணமாக அமைகிறது.

உடல் ஆரோக்கியத்தை கெடுக்கும் உணவுப் பழக்க வழக்கம், மன நலனைக் கெடுப்ப தோடு, உடல் உறுப்பு களையும் சிதைக்கும் போதை பழக்கம் ஆகியவை மகிழ்ச்சியை நம் மனதிலிருந்து அகற்றுவதில் முக்கியப் பங்காற்றுகின்றன. போதைப் பழக்கத்தால் பெரிய அள வில் உடல் நலம் நலிவுற்ற ஒரு நபரின் மன மகிழ்ச்சி மட்டு மல்ல, அவரது குடும் பத்தாரின் மனமகிழ்ச்சியும் இல்லாமல் போய்விடும் என்பதில் ஐயமில்லை.

ஒரு நாடு பொருளாதார வளர்ச்சியி லும், வல்லரசு நாடுகளின் பட்டியலிலும் இடம் பிடிப்பது போன்றவற்றோடு, அந் நாட்டு குடிமக் கள் மகிழ்ச்சியோடு வாழ் வதும் மிக மிக முக்கியம். 'விட்டுக் கொடுப் பவர், கெட் டுப் போவதில்லை என்பர்.

நம்மிலும் மேலான வசதியுடன் வாழும் பிறரைப் போல் வாழ நினைப்பதைக் காட்டிலும் பிறருக்காக நாம் வாழ்ந்தால், மகிழ்ச்சி தானே நம்மை வந்து சேரும். நாம் மகிழ்ச்சியாக வாழ்வது நம் மனம் சார்ந்தது தான் எனினும், சமூகச் சூழலும் நாம் மகிழ்ச்சியாக வாழ்வதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. சமூகத்தில் நாமும் ஓர் அங்கம் என்ற வகையில், பிறரின் மகிழ்ச்சியும் நம் செயல்பாடுகளைச் சார்ந்தது. இதனை உணர்ந்து பிறர் மகிழ்வுடன் வாழ வழி வகுத்து, நாமும் மகிழ்வுடன் வாழ்வோம். ●

# இந்தவார ராசிபலன் 20.04.2025 - 26.04.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 06
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சஷ்டி

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு கிடைக்கும். காரியத் தடைகள், சுறுசுறுப்பு இல்லாத நிலை உருவாகும். பக்தி, ஞானம் மேலிடும். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் தங்கள் புகழும் மரியாதையும் கூடும். பயணத்தில் மகிழ்ச்சி நிலவும். நல்ல நண்பர்கள் மற்றும் உறவினர் அனுசரணை இருக்கும். அரசு வகை இலாபங்கள் ஏற்படும். குடும்பத்தில் மன அமைதி பெற வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு உண்டு. வெளியூர் அலைச்சல்கள் அதிகரிக்கும். ஞானிகளின், பெரியவர்கள் சந்திப்பால் மன அமைதியும், சந்தோஷமும் பெருகும். சிலருக்கு எடுத்த முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். விருந்தினர் வருகையால் வீட்டில் கும்மாளமும், குஷியாகவும் இருக்கும். தங்கள் கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் உங்கள் அசாத்தியத் திறமைகளை வெளிக் காட்டுவதன் மூலம் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். நல்ல சேதிகள் நாடிவரும். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான தகவல்கள் வந்து சேரும். வாரத்தின், முதல் நாள் பயணத்தில் துன்பமும், பின்னர் வரும் நாட்களில் கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி, சகோதரர் விரோதம், அரசு வகைத் தொல்லை ஏற்படும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் எதிர்பாராத இனிய விருந்துகள், மகிழ்ச்சி கொண்டாட்டங்கள் ஏற்படும். எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். அரசாங்கத்திடம் வேண்டப்பட்ட கோரிக்கைகள் தடங்கலின்றி நிறைவேறும். நல்லோர் சேர்க்கையால் நல்லதே நடக்கும். மாணவர்களுக்கு கல்வியில் நல்ல தேர்ச்சி ஏற்படும். சிலருக்கு உழைப்புக் குறைவானாலும் ஆதாயம் அதிகரிக்கும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் இரண்டும் கலந்த வாரம். ஞானிகளின் உபதேசம் கேட்டு மனம் ஞானத் தன்மைக்கு மாறும். அரசுப் பெண் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீண் கோபத்தால் விவேகத்தை இழக்காதீர்கள். தங்கள் சிறப்பான, திறமை மிக்க பணி அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டு, பாராட்டும் பெறும். மேடைப் பேச்சாளர்களுக்கு மேன்மையான நிலை ஏற்படும். இலாபமும் அதிகரிக்கும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிறப்பான காலம். அதன் காரணமாக வங்கி சேமிப்புக் கணக்குகளில் இருக்கும் கையிருப்பு பணம் அதிகரிக்கும். பங்குச் சந்தை ஈடுபாடு இலாபம் பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்பு தேவை. புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். நன்மை ஏற்படும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பொருளாதார நிலைகள் திருப்திகரமாக இருக்கும். பழைய கடன்கள் விரைவில் வசூலாகும். எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். தங்கள் சகோதரனின் நடவடிக்கைகள் உங்களுக்கு எரிச்சலூட்டும். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப் பது நல்லது. இலாபம் ஏற்படும். எதிர்பார்த்த இலக்கை எட்டிவிடுவீர்கள்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் சுக சௌகரியங்கள் சேரும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். வாகன வசதிகள் மேம்படும். சிலருக்கு அதிகாரப் பதவிகள் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து சேரும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய நிலை ஏற்படும். சுபகாரிய நிகழ்ச்சிகள் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் பொன் ஆபரணங்கள் விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி கூடும். நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதி கரிக்கும். நல் ஆரோக்கியமும், புது தெம்பும், புத்தொளியும் ஏற்படும். பணக்கார மனைவியும் அமைவாள். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். பக்தி மிக்க புண்ணிய தல யாத்திரைகள் ஏற்படும். மேம்படும் பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். குடும்பத்தாருக்கும் அவர் கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடுவதால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். பூமி, வீடு ஆகியவற்றின் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் உங்கள் பணவரவு அதிகரிக்கும். புதிய முதலீட்டுத் திட்டங்களில் உங்கள் பணத்தை முதலீடு செய்து தொழிலை விருத்தி செய்வார்கள். நீண்ட நாட்களாக வராத விருந்தினர்கள் விஜயம் செய்து விருந்தாடி மகிழ்வைத் தருவர். நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். பயணங்கள் இனிமை தரும். சினிமா, டிராமா எனப் பொழுதுபோக்குகளில் குடும் பத்தோடு ஈடுபட்டு மகிழ்வீர்கள்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

ஓய்வெடுத்து, உல்லாசமாய்ப் பொழுது போக்கும் விதமாக, நமக்கு எல்லா நாட்களும் விடுமுறை நாட்களாக இருப்பதில்லையே. அதேபோல் இன்பமும் துன்பமும் கலந்தது தான் வாழ்க்கை. பல நாள் கனவுகள் நனவாகும். பொழுதுபோக்கு அம்சங்கள் மற்றும் ஆடம்பர செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு. சிலருக்குப் பிறர் பொல்லாப்பு காரணமாக பயம் தோன்றலாம். தெய்வபலம் இருப்பதால் நேர்மை மற்றும் கடின உழைப்பு ஆகியவற்றால், வாழ்க்கையில் நல்ல முன் னேற்றத்தை அடைவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்தை உள்ளூராட்சி தேர்தல்களுக்கு பணயம் வைத்திருக்கும் தமிழ் அரசியல் கட்சிகள்



வீரகத்தி தனபாலசிங்கம்

**தமிழ் மக்களின் நியாயபூர்வமான தேசிய வாத அரசியல் அபிலாசைகளை ஒருபோதுமே ஏற்றுக்கொள்ளாத ஒரு தேசிய அரசியல் கட்சிக்கு ஆதரவளிப்பதில் இருந்து தமிழ் மக்களை திசைதிருப்புவதற்கு மிகவும் கடுமையாக பாடுபட வேண்டியிப்பது உண்மையில் தமிழ் தேசியவாத கட்சிகளின் மிகப்பெரிய ஒரு தோல்வியாகும்.**

இலங்கை அரசியல் வரலாற்றில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சகல தமிழ் அரசியல் கட்சிகளும் முன்னென்றும் இல்லாத வகையில் அவற்றின் எதிர்காலத்தை உறுதி செய்வதற்காக சிங்கள தலைமைத்துவத்தைக் கொண்ட தேசிய கட்சி ஒன்றுக்கு எதிராக மிகவும் உக்கிரமான பிரசாரங்களை முன்னெடுக்கின்ற ஒரு தேர்தலாக எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல்கள் அமைந்திருக்கின்றன.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சில வாரங்களுக்கு முன்னர் 'தி இந்து' பத்திரிகையின் கொழும்பு செய்தியாளர் மீரா சிறினிவாசனுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் பார்க்கும்போது தமிழ்க்கட்சிகள் 'அனர்த்தத்தை" தவிர்ப்பதற்காக விவேகத்துடன் முகங்கொடுக்க ஒரு அரசியல் சமராக உள்ளூராட்சி தேர்தல்கள் விளங்குகின்றன.

2024 நவம்பர் பாராளுமன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் ஆளும் தேசிய மக்கள் சக்தி கூடுதலான ஆசனங்களை கைப்பற்றியதன் மூலம் படைத்த முன்னென்றுமில்லாத சாதனை தமிழ் தேசியவாத அரசியலின் எதிர்காலம் குறித்து கேள்விகளை எழுப்பியது. தேசிய இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பரவலாக்கல் மூலமாக அரசியல் இணக்கத் தீர்வொன்றை காண்பது தொடர்பில் எதிர்மறையான நிலைப்பாட்டை கடைப்பிடிக்கும் வரலாற்றைக்கொண்ட ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு தமிழ் மக்கள் வழங்கிய ஆதரவு தமிழ்க்கட்சிகளை தடுமாற வைத்தது.

உள்நாட்டுப்போரின் முடிவுக்கு பின்னரான 16 வருடங்களில் தங்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகளைக் காண்பதில் தமிழ்க்கட்சிகள் நிலைவரங்கள் வேண்டி நிற்பதற்கு ஏற்றமுறையில் நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறைகளை கடைப்பிடிக்கவில்லை என்பதால் அவற்றின் மீது ஏற்பட்ட வெறுப்பின் காரணமாகவே தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியின் பக்கம் கணிசமானளவுக்கு திரும்பினார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், கடந்தகால அனுபவங்களில் இருந்து பெறக்கூடியதாக இருக்கின்ற படிப்பினைகளின் அடிப்படையில் எதிர்காலப் பாதையை தீர்மானிக்கும் பக்குவமும் ஆற்றலும் இல்லாத தமிழ்க்கட்சிகள் தேசிய மக்கள் சக்திக்கு பாராளுமன்ற தேர்தலில் கிடைத்த வெற்றியை ஒரு தற்காலிக தடுமாற்றம் என்றே நோக்குகின்றன என்று தெரிகிறது.

வடக்கு, கிழக்கில் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த வாக்குகளை விடவும் தமிழ் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் மொத்தமாக கிடைத்த வாக்குகள் மிகவும் அதிகமானவை என்பதால் தேர்தல் முடிவுகளை தமிழ்த் தேசியவாதத்தை தமிழ் மக்கள் நிராகரிக்கத் தொடங்கியிருப்பதாக வியாக்கியானம் செய்யமுடியாது என்று வாதிட்ட தமிழ் அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள். அத்துடன் தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படாத காரணத்தினாலேயே தமிழ் மக்கள் தங்களுக்கு ஒரு பாடத்தை புகட்ட விரும்பியதாகவும் அவற்றின் தலைவர்கள் இன்னமும் நினைக்கிறார்கள்.

மற்றைய தமிழ்க்கட்சிகளுடன் கூட்டணி அமைப்பதை வழமையாக வெறுத்து வந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கூட உள்ளூராட்சி தேர்தல்களுக்காக, சில உதிரிக்கட்சிகளுடன் என்றாலும், புதியதொரு கூட்டணியை அமைத்து பிரசாரங்களை முன்னெடுத்திருக்கிறார். இலங்கை தமிழரசு கட்சி தனியாகவே போட்டியிடுகின்றது. ஆனால், தற்போதைய தேர்தல் முறை காரணமாக உள்ளூராட்சி சபைகளில் நிருவாகத்தை அமைப்பதற்கு மற்றைய தமிழ்க்கட்சிகளின் ஆதரவு அவசியம் என்பதால் அவற்றுக்கு எதிராக பிரசாரம் செய்வதை அது இயன்றவரை தவிர்க்கிறது.

தமிழரசு கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைமையிலான கூட்டணி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஆகியவையே வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல் களத்தில் நிற்கும் பிரதான அணிகள். இவை சகலதுமே ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு எதிரான பிரசாரத்தை மிகவும் தீவிரமாக முன்னெடுக்கின்ற போதிலும், தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டிய முறை குறித்து வெளிப்படுத்தும் கருத்துக்கள் அவற்றுக்கு இடையிலான கட்சி அரசியல் போட்டியை அம்பலப்படுத்துகின்றன.

ஒவ்வொரு அணியின் அரசியல்வாதிகளும் தங்களுக்கு மாத்திரமே தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். தமிழ்த் தேசியவாதத்தின் மீதான பற்றுறுதியை மீண்டும் வெளிக்காட்டுவதற்கான ஒரு தீர்க்கமான சந்தர்ப்பமாக உள்ளூராட்சி தேர்தல்களை பயன்படுத்துமாறு அவர்கள் தமிழ் மக்களிடம் கெஞ்சுகிறார்கள்.

புத்தாண்டில் தமிழ் மக்கள் புதியதொரு அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கும் தமிழரசு கட்சியின் பதில் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் பாராளுமன்ற தேர்தலில் தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாக, தமிழ் மக்களின் அரசியல், கலாசார தேசியவாத உறைவிடமாக கருதப்படுகின்ற யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்று கூறப்படுவது தவறு என்று வாதிடுகிறார்.

கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்கள் மகாநாடொன்றில் உரையாற்றிய சுமந்திரன், தேசிய மக்கள் சக்திக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் 25 சதவீதமான வாக்குகளே கிடைத்தன என்றும் மற்றைய அனைத்து தரப்புகளுக்கும் கிடைத்திருக்கின்ற வாக்குகளை ஒவ்வொன்றாக நோக்கும்போது தேசிய மக்கள் சக்திக்கு குறைவான வாக்குகளே கிடைத்தன என்றும் கூறினார்.

மற்றைய கட்சிகளுடன் ஒப்பிடும்போது யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்திக்கு கூடுதலான வாக்குகள் கிடைத்த காரணத்தால் தமிழ் மக்களின் ஆணை தங்களுக்கே கிடைத்தது என்று ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க உட்பட அதன் தலைவர்கள் உரிமை கோருவது உண்மையா இல்லையா என்பதை பரீட்சித்துப் பார்ப்பதற்கான ஒரு வாய்ப்பாக உள்ளூராட்சி தேர்தல்கள் அமைகின்றன என்று குறிப்பிட்டிருக்கும் சுமந்திரன், உள்ளூராட்சி தேர்தல்களில் தங்களுக்கு தெளிவான ஆணையை தருமாறு தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

'தேசிய மக்கள் சக்திக்கு அல்லது தென்னிலங்கை கட்சிகளுக்கு எமது மக்கள் ஆணையை வழங்கவில்லை. பாராளுமன்ற தேர்தலில் வாக்களித்ததை போலன்றி உள்ளூராட்சி தேர்தல்களில் தமிழ் மக்கள் தமிழ்க் கட்சிகளுக்கே வாக்களிக்க வேண்டும். அவ்வாறு நாம் விடுக்கும் வேண்டுகோளை எந்த தமிழ்க்கட்சிக்கும் வாக்களிக்கலாம் என்று மக்கள் அர்த்தப்படுத்தக் கூடாது. பல தமிழ் கட்சிகளுக்கு வாக்குகளை பிரித்து வழங்கினால் பாராளுமன்ற தேர்தலில் கிடைத்ததைப் போன்ற முடிவுகளே உள்ளூராட்சி தேர்தலிலும் கிடக்கும்.

'பிரதான தமிழ்க் கட்சியான தமிழரசு கட்சிக்கு மாத்திரமே வாக்களிப்பதன் மூலமாக தமிழ் மக்கள் தங்களின் ஆணை ஒரு தமிழ்க் கட்சிக்கே இருக்கிறது என்பதை நிரூபிக்க முடியும். தமிழ் மக்களின் ஆணை குறித்து செய்யப்படுகின்ற பிரசாரத்தை முறியடிக்கும் வகையில் உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும்" என்று அவர் மேலும் கூறினார்.

சுமந்திரனை போன்றே மற்றைய தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் தங்களது கூட்டணிகளுக்கு மாத்திரமே வாக்களிக்க வேண்டும் என்று தமிழ் மக்களை கேட்கிறார்கள். அவ்வாறு வேண்டுகோள் விடுக்கும்போது அவர்கள் தமிழ் தேசியவாதத்தை பாதுகாப்பதில் தங்களுக்கு மாத்திரமே அசைக்கமுடியாத பற்றுறுதி இருப்பதாக பிரத்தியேகமாக உரிமை கோருவதையும் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த கட்சிகளுக்கு உள்ளூராட்சி தேர்தலில் பொது எதிரியாக தேசிய மக்கள் சக்தி விளங்குகின்ற போதிலும், அவற்றினால் ஒரு குறைந்தபட்ச அரசியல் வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்பட முடியாத அளவுக்கு கட்சி அரசியல் போட்டியும் ஆளுமை மோதல்களும் தடையாக இருக்கும் துரதிர்ஷ்டவசமான நிலைவரத்தைக் காண்கிறோம்.

தேசிய மக்கள் சக்திக்கும் தென்னிலங்கையின் மற்றைய பிரதான பழைய அரசியல் கட்சிகளுக்கும் இடையில் தமிழர்களின் பிரச்சினைகளைப் பொறுத்தவரை எந்தவிதமான வேறுபாடும் கிடையாது என்று தமிழ்க்கட்சிகள் மக்களுக்கு கூறுகின்றன. அதேவேளை, வடக்கு, கிழக்கில் தங்களுக்கு கூடுதலான பாராளுமன்ற ஆசனங்களை தந்த மக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் தொடர்ந்தும் தக்கவைக்கக்கூடியதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கடந்த ஆறுமாத காலச் செயற்பாடுகள் அமையவில்லை என்பது திட்டவட்டமான உண்மை.

தமிழ்க்கட்சிகளின் வேண்டுகோளுக்கு செவிமடுத்து தமிழ் மக்கள் உள்ளூராட்சி தேர்தல்களில் வாக்களிப்பார்களா அல்லது அந்த கட்சிகளின் இதுவரையான அணுகுமுறைகள் மற்றும் செயற்பாடுகள் மீது அவர்களுக்கு இருந்துவரும் வெறுப்பு தணியவில்லையா என்பதை மாத்திரமல்ல, தங்களது பிரச்சினைகள் தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடைப்பிடித்துவரும் அணுகுமுறைகளினால் அவர்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்களா என்பதையும் உள்ளூராட்சி தேர்தல்கள் வெளிக்காட்டும் என்று நம்பலாம்.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் வாக்களிப்பில் எந்தளவுக்கு அக்கறை காட்டுவார்கள் என்ற ஒரு கேள்வியும் எழுகிறது. தமிழ் மக்கள் பாராளுமன்ற தேர்தலில் தமிழ்க்கட்சிகளுக்கு ஒரு பாடத்தை புகட்டுவதற்கு விரும்பினார்கள் என்பதை வெளிப்படையாக ஒத்துக்கொள்ளும் அவற்றின் தலைவர்கள் எந்தப் பயனையும் தராத தங்களது இதுவரையான அரசியல் பாதையை மாற்றுவதில் அக்கறை காட்டாமல் வெறுமனே கற்பனாவாத தேசியவாத சுலோகங்களையே ஒப்புவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் நியாயபூர்வமான தேசிய வாத அரசியல் அபிலாசைகளை ஒருபோதுமே ஏற்றுக்கொள்ளாத ஒரு தேசிய அரசியல் கட்சிக்கு ஆதரவளிப்பதில் இருந்து தமிழ் மக்களை திசைதிருப்புவதற்கு மிகவும் கடுமையாக பாடுபட வேண்டியிருப்பதும் உள்ளூராட்சி தேர்தல்கள் தமிழ்த் தேசியவாதத்தின் இருப்பை உறுதிசெய்வதற்கு மிகவும் முக்கியமானவை என்று கூறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதும் உண்மையில் தமிழ் தேசியவாத கட்சிகளின் மிகப்பெரிய ஒரு தோல்வியாகும். அவை தங்களது எதிர்காலத்தை உள்ளூராட்சி தேர்தல்களில் பணயம் வைத்திருக்கின்றன. ●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார வளர்ச்சிக்காக ஜ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை பாதுகாக்க வேண்டுமானால் சீர்திருத்தங்கள் இன்று அவசியம்!



கலாநிதி ஜெகான் பெரேரா

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் காலந்தாழ்த்துவதற்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மிகவும் கடுமையான கண்டனங்களுக்கு உள்ளாகியிருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை பெருமளவுக்கு மக்கள் நேசமுடையதாக மாற்றியமைப்பதற்கு அந்த நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பில் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றாதமைக்காக எதிக்கட்சிகள் அரசாங்கத்தை கடுமையாக விமர்சனம் செய்கின்றன. வருவாய் திரட்டலுக்காகவும் அரசாங்க செலவினங்களை கட்டுப்படுத்துவதற்காகவும் சர்வதேச நாணய நிதியத்தின் இலக்குகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது போன்று தெரிகிறது.

அரசாங்கத்தின் அடக்குமுறை ஆற்றலை வலுப்படுத்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தையும் இணையவெளி பாதுகாப்பு சட்டத்தையும் இரத்துச் செய்யாதமைக்காக சிவில் சமூக குழுக்களும் அரசாங்கத்தை கடுமையாக சாடுகின்றன. இந்த இரு சட்டங்களையும் இரத்துச் செய்வதாக தேசிய மக்கள் சக்தி உறுதியளித்தது. உறுதியளிக்கப்பட்ட அரசியல் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதை தாமதிப்பதில் உள்ள பிரச்சினை என்னவென்றால், அது அரசாங்கத்தின் நம்பகத்தன்மையை மலினப்படுத்துவது மாத்திரமல்ல, இலங்கையின் பொருளாதார மீட்சியை மலினப்படுத்தும் ஆபத்தையும் கொண்டிருக்கிறது.

இலங்கையின் ஏற்றுமதிகள் மீது விதிக்கப்படவிருந்த வரிகள் தொடர்பில் அமெரிக்க அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு வசதியாக இலங்கைக்கு மூன்றுமாத கால 'மூச்சுவிடக்கூடிய' அவகாசம் கிடைத்திருக்கிறது. இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதிச் சந்தையாக அமெரிக்கா விளங்குகிறது. இலங்கை அதன் மிகப்பெரிய இரண்டாவது வர்த்தகப் பங்காளியான ஐரோப்பிய ஒன்றியத்திலும் ஏற்றுமதிச் சந்தைகளை பாதுகாப்பதிலும் அதேபோன்ற சவால்கள் தோன்றியிருக்கின்றன. தற்போது இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை அனுபவிக்கிறது.

இந்த சலுகை (அல்லது ஊக்குவிப்பு) ஆடைகள், கடலுணவு உட்பட 6 ஆயிரத்துக்கும் அதிகமான உற்பத்திகளை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு இலங்கை தீர்வையின்றி அனுப்புவதற்கு அனுமதிக்கிறது. ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகையின் பயன்களை இலங்கை தொடர்ந்தும் அனுபவிக்க வேண்டுமானால், மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள் சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் நல்லாட்சிமுறை ஆகியவற்றுடன் தொடர்படைய 27 சர்வதேச சமவாயங்களை பின்பற்றவேண்டும் என்ற நிபந்தனை இருக்கிறது. மனித உரிமைகள் நியமங்களை பின்பற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் தவறியமைக்காக 2010 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வாபஸ் வாங்கியது என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டியது அவசியமாகும்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கை 2017 ஆம் ஆண்டில் மீளப் பெற்றுக்கொண்டது என்றபோதிலும், அந்த சலுகை தொடருமா என்ற சந்தேகமும் எழுந்தது. மனித உரிமைகள் நிலைவரங்களை அடிப்படையாகக் கொண்டு அந்த சலுகையை மறுமதிப்பீடு செய்யுமாறு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிய ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றம் பயங்கரவாத தடைச்சட்டத்தை இலங்கை இரத்துச் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது. பயங்கரவாத தடைச் சட்டம் அடாத்தான முறையில் ஆட்களை நீண்டகாலம் தடுத்து வைப்பதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதாகவும் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிராக அந்த சட்டம் பெருமளவுக்கு துஷ்பிரயோகம் செய்யப்படுவதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியது. தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒழிப்பதாக உறுதியளிக்கப்பட்டது.

ஆனால், பயங்கரவாத தடைச்சட்டம் இன்னமும் சட்டப் புத்தகத்தில் இருப்பது மாத்திரமல்ல, இன்று வரை அது பயன்படுத்தப்பட்டும் வருகிறது. இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருப்பதால், இந்த தடவை அணுகுமுறையில் ஏதாவது கனிவைக் காட்டுவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தயாராக இருக்கிறதா என்று கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொறேனாவிடம் கேட்கப்பட்டபோது 'நாம் எல்லோருமே நெருக்கடியான காலகட்டம் ஒன்றின் ஊடாகவே சென்று கொண்டிருக்கிறோம். நிபந்தனைகளை குறைக்குமாறு சர்வதேச நாணய நிதியத்திற்கு நீங்கள் மீண்டும் கூறுகின்றீர்களா? இலவச அனுமதிச்சீட்டை தருமாறு கேட்கிறீர்களா! நாங்கள் தீர்வையற்ற வரிச்சலுகையை உங்களுக்கு தருகின்றோம். ஆனால், நீங்கள் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டுச் செயற்பட வேண்டும்" என்று அவர் பதிலளித்ததாக கூறப்படுகிறது. இலங்கை அதற்குரிய கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் உருப்படியான முன்னேற்றத்தைக் காண்பிக்கவில்லையானால் 2026 ஆம் ஆண்டில் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையில் இருந்து விலக்க வைக்கப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது.

இடையூறு எதுவுமின்றி பொருளாதாரம் சுமுகமாக செயற்படுவதை உறுதிசெய்வதே தற்போதைய தருணத்தில் அரசாங்கத்தின் பிரதான கவனம் என்று தோன்றுகிறது. அதாவது சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை உறுதியாகப் பின்பற்றுவதே அதன் அர்த்தமாகும். பொருளாதார வளர்ச்சியும் ஊழல் மற்றும் விரயம் ஒழிப்புமே கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தியை அதிகாரத்துக்கு கொண்டுவந்தன என்று அரசாங்கம் உணருகிறது. மனித உரிமைகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் விதிக்கும் நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டிய கடப்பாடுகளும் பொருளாதார வளர்ச்சியில் தாக்கத்தை செலுத்தும் என்பதால் அவற்றையும் இந்த பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.




**முறைமை மாற்றம் ஒன்றைக் கொண்டு வரப்போவதாக உறுதியளித்துக் கொண்டே தேசிய மக்கள் சக்தி ஆட்சியதிகாரத்துக்கு வந்தது. அந்த வாக்குறுதி ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார முகாமைத்துவத்தில் இருந்து நல்லிணக்கத்தையும் சர்வதேச ஒத்துழைப்பையும் உள்ளடக்கிய ஜனநாயக ஆட்சிமுறையை தழுவியதாக விரிவுபடுத்தப்பட வேண்டும்.**

ஜி.எஸ்.பி.பிளஸ் நிபந்தனைகள் ஒரு அச்சுறுத்தல் அல்ல, ஒரு வாய்ப்பு என்றும் இலங்கை அரசாங்கம் அது விடயத்தில் மானசீகமான ஈடுபாட்டையும் வெளிப்படைத்தன்மையையும் சீர்திருத்தங்களுக்கான நம்பகத்தன்மை கொண்ட பாதை வரைபடத்தையும் வலியுறுத்துகிறது என்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் தெளிவாகக் கூறியிருக்கிறார். சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை பின்பற்றுவதில் காண்பிக்கின்ற அதேயளவு பற்றுறுதியை ஜி.எஸ்.பி. பிளஸ் நிபந்தனைகளை நிறைவேற்றுவதிலும் அரசாங்கம் காண்பிக்க வேண்டியதும் ஊழலுக்கும் விரயத்துக்கும் முடிவைக்கட்டுவதும் அவசியமானதாகும். இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு புத்துயிர் கொடுக்கப்பட்டிருப்பது இது விடயத்தில் அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாட்டை உறுதிசெய்கிறது.

ஆனால், தற்போதைய தருணத்தில் ஆட்சிமுறையின் ஏனைய துறைகளில் கவனம் செலுத்துவதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டுகின்றது போன்று தெரிகிறது. அரசாங்கம் அதன் கவனத்தை மேற்குறிப்பிட்ட துறைகளுடன் மட்டுப்படுத்துவதற்கே விரும்புகிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குதல், தேசிய நல்லிணக்கம் போன்ற முன்னுரிமைக்குரிய ஏனைய துறைகள் சிறுபான்மைச் சமூகங்களுக்கும் சர்வதேச சமூகத்தின் சில பிரிவுகளுக்கும் முக்கியமானவையாக இருக்கின்ற போதிலும், அவற்றின் மீது கவனத்தைச் செலுத்துவதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டுவதற்கு அதுவே காரணம்.

தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்த போதிலும் கூட, பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்ய அரசாங்கம் தவறியிருக்கிறது. கடந்த காலத்தில் இடம்பெற்ற குற்றச்செயல்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கைதுசெய்வதற்கும் நீதித்துறை நடைமுறைகளை பின்பற்றாமல் அவர்களை நீண்டகாலத்துக்கு தடுத்து வைக்கக்கூடியதாகவும் பயங்கரவாத தடைச்சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்தத் தொடங்கியிருப்பது ஒரு முரண்நகையாகும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதிகாரம் மீதான அதன் பிடியை வலுப்படுத்துவதற்கு தற்போதைய தருணத்தில் முன்னுரிமை கொடுத்திருக்கிறது போன்று தெரிகிறது. நிருவாக நடைமுறைகளில் சீர்திருத்தங்களைச் செய்வதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு தற்போதைய நிருவாக கட்டமைப்புகளின் உயர்மட்டங்களில் எதிர்ப்பு இருக்கிறது என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. தீர்மானங்களை எடுக்கும் பணிகளுக்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டியவர்களுக்கும் இடையில் பூசல் நிலவுகிறது.

அதன் காரணத்தினால்தான் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் புதிய செயற்தடத்தை தொடக்கிவைக்கும் வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அரசாங்க அதிகாரிகள் புதிய நெறிமுறைகளுக்கு பொருத்தமானவர்களாக தங்களை மாற்றிக் கொள்வதற்கு ஆறு மாதகால அவகாசத்தை வழங்குவதாகவும் அவ்வாறு அவர்கள் தங்களை மாற்றிக் கொள்ளத் தவறினால் அரசாங்கத்தினால் அவர்கள் மாற்றப்படுவார்கள் என்றும் கூற வேண்டியேற்பட்டது.

எதிரணி கட்சிகளை குறிப்பாக சிறுபான்மைச் சமூகக் கட்சிகளை உள்ளடக்கிய பெருமளவுக்கு சகல தரப்புகளையும் அரவணைக்கும் ஆட்சிச் செயன்முறையில் ஈடுபடுவது அரசாங்கத்துக்கும் நீண்டகால அடிப்படையில் நாட்டின் உறுதிப்பாட்டுக்கும் முக்கியமானதாக இருக்கும். தேர்தல் விஞ்ஞாபனத்தில் காணப்படுகின்ற மனித உரிமைகள், நல்லாட்சி மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பிலான உறுதிமொழிகளைக் கௌரவிப்பதன் மூலமாக தேர்தல் ஆணையை சகல இலங்கையர்களுக்குமான நிலைபேறான முன்னேற்றத்துக்கான ஆணையாக அரசாங்கத்தினால் மாற்றமுடியும்.

குறிப்பாக, சிறுபான்மையினச் சமூகங்களின் கட்சிகளின் ஆதரவைப் பெறுவது நீண்டகால அடிப்படையில் அரசாங்கத்தின் நம்பகத்தன்மைக்கு முக்கியமானதாக இருக்கப்போகின்றது. சர்வதேச சமூகம் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தினதும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களினதும் பிரசாரங்களினால் பாதிக்கப்படக்கூடியது. இந்த இரு குழுக்களும் இனமோதலுடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கு அரசாங்கங்கள் தவறியதை மிகவும் கடுமையாக கண்டனம் செய்துவருகின்றன.

போர்க்கால மனித உரிமைகள் துஷ்பிரயோகத்துடன் தொடர்புடைய சர்ச்சைக்குரிய பிரச்சினைகளையும் இனமோதலுக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பது தொடர்பிலான பிரச்சினைகளையும் கையாளவேண்டிய அவசியத்தைக்கொண்ட தேசிய நல்லிணக்கச் செயன்முறை மீது இதுவரையில் அரசாங்கம் கவனத்தைச் செலுத்தவில்லை. இந்த பிரச்சினைகளை பின்னர் ஒரு கட்டத்தில் தொடங்கப்படக்கூடிய - பிரச்சினைகள் தீர்வின் இரண்டாம் கட்டத்தில் கையாளுவதற்கென்று அரசாங்கம் வைத்திருக்கின்றது போன்று தோன்றுகிறது.

மாகாணசபை தேர்தல்கள் ஆறு வருடங்களுக்கும் அதிகமான காலமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கின்ற போதிலும், இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் விஜயம் மற்றும் அவருடனான பேச்சுவார்த்தைகள் வரை அந்த தேர்தல்களை அடுத்தவருடம் நடத்துவது என்ற நிலைப்பாட்டையே அரசாங்கம் எடுத்திருந்தது. அத்தகையதொரு நிலைப்பாடு சிறுபான்மைச் சமூகங்களின் கட்சிகளுக்கு குறிப்பாக, தமிழ் அரசியல் கட்சிகளுக்கு ஏற்புடையது அல்ல.

மக்களுடைய இனம் அல்லது மதம் கடந்து அவர்கள் சகலரும் சமத்துவமாக நடத்தப்படுவதை உறுதிசெய்வதே மற்றத்தைக் காண்பிக்கும் அரசாங்கத்தின் வழிமுறையாக இருந்து வந்திருக்கிறது. ஆனால், காணாமல்போனோர் தொடர்பான பிரச்சினைகள், இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்ட காணிகளை அவற்றின் சட்டபூர்வமான உரிமையாளர்களுக்கு திருப்பிக்கையளித்தல், நாட்டின் ஏனைய பாகங்களில் உள்ளதற்கு சமமானதாக வடக்கு, கிழக்கில் இராணுவத்தினரின் எண்ணிக்கையை குறைத்தல், மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டை வழங்குதல் மற்றும் மாகாணசபை தேர்தல்களை நடத்துதல் போன்ற பிரச்சினைகளுக்கு பெருமளவுக்கு துரிதமான தீர்வுகளைக் காணவேண்டிய தேவை ஒன்று இருக்கிறது.

முறைமை மாற்றம் ஒன்றைக் கொண்டு வரப்போவதாக உறுதியளித்துக் கொண்டே தேசிய மக்கள் சக்தி ஆட்சியதிகாரத்துக்கு வந்தது. அந்த வாக்குறுதி ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார முகாமைத்துவத்தில் இருந்து நல்லிணக்கத்தையும் சர்வதேச ஒத்துழைப்பையும் உள்ளடக்கிய ஜனநாயக ஆட்சிமுறையை தழுவியதாக விரிவுபடுத்தப்பட வேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை தொடர வேண்டுமானால், அரசாங்கத்தின் செயற்பாடுகள் வெற்றியடைவதை உறுதிப்படுத்த வேண்டுமானால் பிரச்சினைகள் தீர்வுக்கான இரண்டாம் கட்டம் வரை காத்திருத்தலாகாது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தேர்தலுக்குமுன் இணைந்து போட்டியிட்டு இலகுவாக வெற்றிபெறுவதை தவிர்த்துவிட்டு தோல்வியின்பின் இணையலாம் என்பது...?

பனங்காட்டான்

இன்னும் இரண்டு வாரங்களில் இடம்பெறவுள்ளதென எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல், தமிழர்களின் வடக்கையும் கிழக்கையும் மையப்படுத்தியே முன்னெடுக்கப்படுகிறதா?

கடந்த சில வாரங்களாக ஆட்சித் தரப்பினர்களான தேசிய மக்கள் சக்தியினர் மேற்கொண்டு வரும் தேர்தல் சுற்றுலாக்களும், கொள்கையில்லாத விளக்கங்களும் ஒரு வகையில் அச்சுறுத்தலாக மாறி வருவதை தமிழ் மக்கள் கூர்மையாகக் கவனிக்கின்றனர்.

தமிழர் பிரதேசத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகளில் தாங்கள் தோற்றால் என்ன செய்வோம் அல்லது எவ்வாறு பழி வாங்குவோம் என்பதை ஒளிவு மறைவின்றி பகிரங்கமாகவே அநுர தரப்பினர் அறிவித்து வருகின்றனர். அமைச்சர்கள் விஜித ஹேரத், பிமல் ரத்னாயக்க, ஹரிணி அமரசூரிய ஆகியோர் அண்மைக் காலங்களில் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பரப்புரைகள் செய்தனர். ஆதரவு கூட் டங்களை நடத்தினர்.





கடந்த வார பிற்பகுதியில் ஜனாதிபதி தோழர் அநுர குமர வடக்குக்கு விஜயம் மேற்கொண்டார். முன்னைய தேர்தல் காலங்களில் பாசையூரிலும், வல்வெட்டித்துறையிலும் இடம்பெற்ற கூட்டங்களில் காணப்பட்ட சனத்திரளை கடந்த வாரம் நல்லூரில் நடத்திய கூட்டத்தில் காணவில்லை. இவர்களின் அண்டப் புளுகுகளை ஆறு மாதத்துக்குள் மக்கள் கண்டுபிடித்ததன் விளைவாக சனத்தொகை குறைந்திருக்கலாம்.

முன்னைய இரண்டு தேர்தல்களின் போதும் தமிழர்களின் வாக்குகளை கொள்ளையடிப்பதற்காக வழங்கிய உறுதிகள் எதனையும் இவர்கள் நிறைவேற்றவில்லை. வேறு வடிவங்களில் புதிய பிரச்சனைகளை உருவாக்கியுள்ளனர். நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலானது அந்தந்தப் பிரதேசங்களில், முக்கியமாக கிராம மட்டங்களில் உள்ளூர் சபைகளுக்கு உறுப்பினர்களையும் தலைவர்களையும் தெரிவு செய்வதற்கானது. கட்சிகள் சார்பில் போட்டிகள் இடம்பெற்றாலும் வேட்பாளர்கள் அந்தந்தப் பகுதிகளில் வாழ்பவர்களிலிருந்தே பொறுக்கியெடுக்கப்படுவர்.

இந்தத் தேர்தல்களில் பிரதமர்களோ, அமைச்சர்களோ கூட்டங்களை நடத்தி வாக்குக் கேட்பது மிகமிக அரிதானது. சில அமைச்சர்கள் தங்கள் பிரதேசங்களில் தங்கள் வாக்கு வங்கிகளை தக்க வைப்பதற்காக தமக்கு ஆதரவானவர்களுக்கு ஆர்ப்பாட்டமில்லாது வாக்குச் சேகரிப்பது உண்டு. எனது நீண்டகால ஊடகப் பணியில் ஜனாதிபதி அல்லது பிரதமர் போன்றவர்களை உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களின்போது கண்டது கிடையாது. இதற்கு மாறாக இப்போது நடைபெறவுள்ள தேர்தல் அநுர குமர அணியினரால் புரட்சி அரசியலாக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி. சார்பு அணியினரான அநுர குமர தரப்பு கிராம மட்டங்களில் உள்ளூர் மக்களைத் தேடிப்பிடித்து வேட்பாளராக நிறுத்தியதோடு, அதன் அடுத்த பட்டியலில் அப்பிரதேசங்களைச் சேராத பெரும்பான்மையினர் சிலரையும் வேட்பாளராக நிறுத்தியுள்ளதாக குற்றச்சாட்டு வந்துள்ளது. இதனைப் பார்க்கும்போது, இலங்கை என்பது சுமந்திரன் கூறுவது போல ஏக்கராஜ்ய என்ற கொள்கையில், இலங்கையின் எந்தப் பாகத்திலும் எவரும் அரசியல் செய்யலாம் என்பதைக் காட்டுவதுபோல் அமைந்துள்ளது. இதனால் தான் அநுர தரப்பினர் வடக்கில் கூடார மடித்து பரப்புரை செய்ய வேண்டிய

> வெற்றி பெறுவதற்குச் சாதகமாக தேர்தலுக்கு முன்னர் கூட்டுச் சேர்ந்து சகல சபைகளையும் இலகுவாக கைப்பற்றுவதைத் தவிர்த்து, தோல்வி அடைந்த பின்னர் கூட்டுச் சேரலாமென அந்தத் தோல்விக்காக காத்திருப்பதென்பது அறப்படித்த பல்லியின் கதையை நினைவுபடுத்துகிறது. தமிழரசு கட்சிக்குள் ஏட்டிக்குப் போட்டியாக நிற்கும் சுமந்திரனும் சிறீதரனும் எப்போது ஒன்றாக இத்தேர்தல் மேடையில் நின்று வாக்கு கேட்கப் போகிறார்கள்?

தேவை ஏற்பட்டுள்ளது.

தமிழர்களின் உருத்துக் காணியில் தையிட்டி விகாரை நிர்மாணிக்கப்பட்டு வந்தபோது அதனை நிறுத்தக்கோரி காணிச் சொந்தக்காரர்கள் தொடர்ச்சியான அமைதிப் போராட்டம் நடத்தி வந்தனர். இவர்களின் கோரிக்கையை மதிக்காது மிதித்த அநுர குமர தரப்பு விகாரை கட்டி முடிக்கும்வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தேர்தல் பரப்புரைக்கு இங்கு வந்தபோது, தமிழர் அரசியல்வாதிகள் தலையீடு இல்லாது போகுமானால் பிரச்சனையை தீர்க்க முடியுமென்று கூறியுள்ளார். இதனைத் தீர்த்து வைக்கும் அதிகாரம் உள்ள ஜனாதிபதியே அரசியலை உள்ளிழுப்பது அதிலிருந்து தப்புவதற்கான ஆயுதம்.

குருந்தூர் மலையிலும், வெடுக்குநாறி மலையிலும், திருமலை வெருகல்மலையிலும் தமிழர் வழிபாட்டுத் தலங்களுக்கு முன்னைய ஆட்சிகளில் என்ன நடைபெற்றதோ அதுவே தையிட்டி விகாரையில் இந்த ஆட்சியில் நடைபெறுகிறது. காணிச் சொந்தக்காரர்கள் அரசியல்வாதிகள் தலையீடு வேண்டாமென்று கூறினால் தாங்கள் விலகிக் கொள்ள தயாரென்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளமைக்கு அநுர குமர என்ன பதிலளிக்கப் போகிறார்?

முப்பது வருடங்களுக்கு மேலாக இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த பலாலி ஊடான வீதி உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு அவசரமாக சில நாட்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்டது. இதற்கான அறிவிப்புப் பலகையில் கடுமையான நிபந்தனைகள் எழுதப்பட்டுள்ளது. திறக்கப்பட்ட இந்தப் பாதையால் எவரும் நடந்து செல்லக்கூடாது. சைக்கிளில் செல்ல முடியாது. இரவு நேரங்களில் போக்குவரத்துக்குத் தடை என்று பல நிபந்தனைகள்.

பொதுவாக நீதிமன்றங்களில் ஒருவரை பிணையில் விடும்போது கடுமையான நிபந்தனைகள் விதிப்பது சட்ட வழக்கம். ஆனால், திறக்கப்பட்டுள்ள வீதியில் செல்வதற்கு கடும் நிபந்தனைகள். இதற்கு எந்தச் சட்டம் இடமளிக்கிறது என்று நியாயமான கேள்வி கேட்டுள்ளார் தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரன்.

இவை எல்லாவற்றையும் தாண்டி உச்ச சர்வ அதிகார அறிவிப்பை அநுர குமர ஒவ்வொரு கூட்டங்களிலும் வெளியிட்டு வருகிறார். தமது கட்சி வெற்றி பெறும் உள்ளூராட்சிச் சபைகளுக்கு வேண்டிய நிதி எந்த நிபந்தனையுமின்றி உடனடியாக வழங்கப்படுமென்றும், மாற்றுக் கட்சிகள் வெற்றி பெறும் சபைகள் நிதிக்கு விண்ணப்பித்தால் பத்துத் தடவை ஆராய்ந்த பின்னரே முடிவெடுக்கப்படும் என்றும் பகிரங்கமாகவே கூறி வருகிறார். இதனை ஒரு வரியில் கூறுவதானால், தாங்கள் வெற்றி பெறாத சபைகளுக்கு நிதி வசதி கிடையாது என்பதுவே. இதனை லஞ்சக் குற்றச்சாட்டுக்குள் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படலாம், தேர்தலுக்கு முரணான செயற்பாடு என முறையிடலாம் என சொல்லப்படுகிறது. பூனைக்கு மணி கட்டப்போவது யார்?

அநுரவின் பிரதமர் ஹரிணியின் தேர்தல் பிரச்சாரம் வேறு வகையானது. புதிய அரசியலமைப்பு வரும், அதற்கான ஆலோசனைக் குழு அமைக்கப்படும், மாகாண சபைத் தேர்தல் இடம்பெறும், தமிழர்கள் பிரச்சனை தீர்க்கப்படும் என்றவாறு யாழ்ப்பாணத்திலுள்ள சைவ ஆலயங்களின் வீதிகளில் கூட்டங்கள் வைத்து மக்களை நம்ப வைத்து ஏமாற்றும் சூழ்ச்சிப் போக்கு இவருடையது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான அநுர குமர பங்குபற்றிய கூட்டம் கடந்த வாரம் நல்லூரில் இடம்பெற்றது. இதற்கான முற்கூட்டிய அறிவிப்பில் கிட்டு பூங்காவில் கூட்டம் இடம்பெறுமென இருந்தது. பின்னர் வந்த அறிவிப்புகளில் இடப்பெயரை சங்கிலியன் பூங்கா என மாற்றி விட்டார்கள். கிட்டு என்ற பெயரை பயன்படுத்தினால் அது விடுதலைப் புலிகளின் நிலம் என்று தங்களைப் பாதித்து விடலாமென ஏற்பட்ட அச்சமே இதற்குக் காரணம்.

யாழ்ப்பாணத்துக்கு வந்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க (ஜே.வி.பி.யின் அடுத்த ஜனாதிபதி பதவிக்கு கண் வைத்திருப்பவர்), தாங்கள் ஒருபோதும் தமிழரைக் கைவிட மாட்டோம் என்று தம் பங்குக்கு சொல்லியுள்ளார். இவர்களுக்கு ஒட்டுமொத்தமாக பதிலளிப்பது போல் தமிழரசுக் கட்சியின் நிகழ்காலத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கருத்து வெளியிடுகையில், சிங்கள தேசியத்தில் தமிழரைக் கரைக்க ஜே.வி.பி. முயற்சிக்கிறது என்று சாடியுள்ளார்.

இந்தக் கருத்தை தமிழ் மக்கள், முக்கியமாக தமிழ் வாக்காளர்கள் தங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை யாக கவனத்தில் எடுக்க வேண்டிய நேரம் இது.

தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரன் அண்மையில் வெளியிட்ட ஒரு கருத்து இங்கு குறிப்பிடப்பட வேண்டியது. அது இதுவே: கடந்த ஜனாதிபதி தேர்தலுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் நாடாளுமன்றத் தேர்தலில் பத்து வீதமானவர்கள் வாக்களிக்கவில்லை. தேசிய மக்கள் சக்திக்கு 25 சதவீத வாக்குகள் கிடைத்தன. தமிழரசு கட்சிக்கு 20 சதவீதம் கிடைத்தது, ஏனைய தரப்பினருக்கு இதனிலும் குறைவான வாக்குகள் கிடைத்தன. இதன்படி பார்க்கையில் தமிழ் கட்சிகள் பெற்ற வாக்குகளைக் கூட்டினால், அது தேசிய மக்கள் கட்சிக்குக் கிடைத்ததைவிட கூடுதலானது என்று கூறியுள்ளார் சுமந்திரன்.

இந்தக் கணக்கு உண்மையானது. இதன்படி பார்க்கின், தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த வாக்குகளைவிட அதற்கு எதிராகக் கிடைத்த வாக்குகளே கூடுதலானவை. இப்போது ஒரு கேள்வி எழுகிறது. இதனை நன்கு தெரிந்து கொண்ட பின்னரும் தமிழ் தேசிய கட்சிகள் எதற்காகப் பிரிந்து நின்று தங்கள் வாக்குகளை சிதறடிக்க வேண்டும்? இதனை நன்கு தெரிந்து கொண்டதால்தான் அனைவரும் ஒன்றிணைந்து தேர்தலை சந்திப்போம் என்ற வேண்டுகோளை கஜேந்திரகுமார் விடுத்தார் என்பதையும் இங்கு நினைவு படுத்த வேண்டியுள்ளது.

அப்போது இதற்குப் பதிலளித்த தமிழரசு கட்சி, தேர்தலின் பின்னர் தேவைப்பட்டால் நாம் ஒன்றிணைந்து உள்ளூராட்சிச் சபைகளை கைப்பற்றுவோம் என்று கூறியது புத்திசாலித்தனமானதா?

வெற்றி பெறுவதற்குச் சாதகமாக தேர்தலுக்கு முன்னர் கூட்டுச் சேர்ந்து சகல சபைகளையும் இலகுவாக கைப்பற்றுவதைத் தவிர்த்து, தோல்வி அடைந்த பின்னர் கூட்டுச் சேரலாமென அந்தத் தோல்விக்காக காத்திருப்பதென்பது அறப் படித்த பல்லியின் கதையை நினைவுபடுத்துகிறது.

தமிழரசு கட்சிக்குள் ஏட்டிக்குப் போட்டியாக நிற்கும் சுமந்திரனும் சிறீதரனும் எப்போது ஒன்றாக இத்தேர்தல் மேடையில் நின்று வாக்கு கேட்கப் போகிறார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் தலைமுறையினரின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற கனடா தமிழர் தகவலின் 34வது ஆண்டு விருது விழா

கனடாவின் வளர்ச்சியிலும் இங்கு பன்முகப் பண்பாடு சிறந்து ஓங்குவதிலும் தமிழர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது என்று கனடா தமிழர் தகவலின் 34வது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றுகையில் ரொறன்ரோவின் நகர மேயர் திருமதி ஒலிவியா செள தெரிவித்தார்.

ரொறன்ரோ பெரும்பாகத்தில் அடர்த்தியாக வாழும் தமிழர்கள் இந்நகரின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்களிப்பு செய்து வருபவர்கள். கனடிய சமூகத்தின் உயர்ச்சியில் தம்மை இணைத்து வருபவர்கள். 34 வருடங்களாக தொடர்ச்சியாக தமிழர் தகவல் என்ற மாத இதழை வெளியிட்டு வருவதன் ஊடாக தமிழரின் அர்ப்பணிப்பை புரிந்து கொள்ள முடியுமென்று தொடர்ந்து உரையாற்றுகையில் ஒலிவியா செள தெரிவித்தார்.

கனடியத் தமிழரின் மகுட விழாவாக பெருமை பெற்றுத் திகழும் தமிழர் தகவலின் விருது விழா 34வது ஆண்டாக ரொறன்ரோ நகரசபையின் அங்கத்தவர் சபா பீடத்தில் ஏப்ரல் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. முழுமையாக இளைய தலைமுறையினரின் முன்னெடுப்பில் இடம்பெற்ற இவ்விழா நேரக்கட்டுப்பாட்டுடன் சுருக்கமான உரைகளோடு நிகழ்ந்தது.









இளமுகில் சுவடு என்ற தலைப்பிலான 34வது ஆண்டு மலர் வெளியீடு முதல் அமர்வாக தமிழில் இடம்பெற்றது. ரொறன்ரோ பல்கலைக்கழக மாணவன் அக்சே ஜெயபாலசிங்கம் கலப்பற்ற தனித்தமிழில் தமது தலைமை உரையை நிகழ்த்தினார். கிருக்ஷ்ணராஜ குருக்களின் ஆசியுரையை அடுத்து, திரு. குயின்ரஸ் துரைசிங்கம் மலர் வெளியீட்டுரையை நிகழ்த்தினார். 164 பக்கங்களில் விளம்பரங்கள் எதுவுமின்றி 64 ஆக்கங்களோடு ஆண்டு மலர் வெளியிடப்பட்டது. இதில் 14 ஆக்கங்கள் இளந்தலைமுறையினரால் எழுதப்பட்டவை.

வாழ்நாள் சாதனையாளர் விருது பெறுவதற்காக இலங்கையிலிருந்து வருகை தந்திருந்த அன்பு அறிவிப்பாளர் திரு.பி.எச்.அப்துல் ஹமீத் சிறப்புரை ஆற்றினார்.

விழாவின் இரண்டாவது அமர்வு ஆங்கிலத்தில் 34வது ஆண்டு விருதுகள் வழங்குவதாக அமைந்தது. ரொறன்ரோ மாவட்ட கல்விச்சபையின் தலைவர் திரு. நீதன் சண்முகராஜா இதற்குத் தலைமை தாங்கினார். விருதுகள் தெரிவுக்குழுவின் தலைவரான ரொறன்ரோ பல்கலைக்கழக பேராசிரியர் வண. அமுது ஜோசெப் சந்திரகாந்தனின் நெறிப்படுத்தலில் விருது பெறுவோர்களுக்கான சான்றுரைகளை அனோஜினி குமரதாசன், அமிருதா சசிகரன், கெவின் தெய்வேந்திரன், அக்சன் ரவிசங்கர் ஆகிய இளையோர் நிகழ்த்தினர்.

கலைத்துறைக்கான விருதை பிரபல மிருதங்க வித்துவான் இராஜலிங்கம் வாசுதேவனும், நான்கு தசாப்த எழுத்துப்பணிக்கான விருதை சிறீரஞ்சனி விஜேந்திராவும், வணிக சாதனை முன்னோடி விருதை திரு.பத்மநாதன் ரங்கநாதனும், பன்முக ஆற்றல் மாணவ விருதை செல்வன் நரேக்ஷ் கொட்வினும், தமிழ் ஊடக சாதனைப் பெண் விருதை திருமதி ராஜி அரசரட்ணமும், சமூகப்பணிக்கான விருதை ஒன்ராறியோ முதுதமிழர் மன்றமும், வாழ்நாள் சாதனையாளர் விருதை அன்பு அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீதும் பெற்றனர். விருதுகளையும், தங்கப் பதக்கங்களையும் நகர மேயர் ஒலிவியா செள தமிழர் சமூக முன்னணிப் பிரமுகர்களுடன் இணைந்து வழங்கி விருதாளர்களை மாண்பேற்றினர். முதுதமிழர் மன்றத் தலைவர் வழக்கறிஞர் மனுவல் ஜேசுதாசன் நன்றியுரை வழங்கினார்.





செல்வி. பிரைட்னி குலேந்திரனின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமான இரண்டு மணி நேர விழா செல்விகள் அபர்ணா கேதா மற்றும் பூஜா தேவதாஸ் ஆகியோரின் கனடிய தேசிய கீதத்துடன் நிறைவு பெற்றது.

இலங்கையின் அதிமூத்த ஊடகவியலாளரும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழமுரசு மற்றும் முரசொலி தினசரிகளின் பிரதம ஆசிரியராகவும் கடமையாற்றிய திரு எஸ். திருச்செல்வம் தமிழர் தகவல் சஞ்சிகையின் வெளியீட்டாளராகவும், முதன்மை ஆசிரியராகவும் பணியாற்றி வருகிறார்.

---

# யாழ் பல்கலைக்கழக மாணவருக்காக 2 கோடி ரூபாய் நிதி திரட்டும் வெற்றிப் பயணம்!



**மு.நித்தியானந்தன், லண்டன்**

தேசியப் பல்கலைக் கழகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1974 ஆம் ஆண்டு பேராசிரி யர் க.கைலாசபதி அவர்களை வளாகத் தலைவராகக் கொண்டு தின்னவேலியில் நிறுவப்பட்டபோது, யாழ்ப்பாணத்தின் கல்வியியல் வரலாற்றில் புது அத்தியாயம் திறந்தது.

சென்ற ஆண்டு அப்பல்கலைக்கழகம் தனது 50 ஆண்டு நிறைவினைப் பொன்விழாவாகக் கொண்டாடிப் பெருமிதம் கொண்டது.

லண்டனில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பழைய மாணவர் சங்கம், 800 மாணவர்களைத் திரட்டி பிரமாண்டமான விழாவினை நடத்தி முடித்திருந்தனர். பல்வேறு துறை சார்ந்த பழைய மாணவர்கள் வெளிநாடுகளில் உன்னதத் தொழில்களில் அமர்ந்து, தங்களை வாழ்வித்த பல்கலைக் கழகத்தின் பெருமைபேசித் திளைத்திருந்ததை கண்கூடாகப் பார்த்தபோது நான் மகிழ்ச்சியின் எல்லையில் நின்றேன்.

இம்மாதம் 26,27,28 ஆகிய மூன்று தினங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடப் பழைய மாணவர்கள் சங்கம், பல்கலைக் கழக வளாகத்திலேயே பிரமாண்டமான பொன்விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகளில் உற்சாகமாக ஈடுபட்டு வருகிறார்கள் என்பது மனதிற்கு நிறைவு தருகிறது.

மிக மிக வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் ஆரம்பமான அப்பல்கலைக் கழகம் இன்று சமூக விஞ்ஞானம், மானுடப்பண்பியல்,தூய-பிரயோக விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல், தொழில் நுட்பம், முகாமைத்துவம், பாரம்பரிய மருத்துவம், விவசாயம், நாடகம், காட்சிப்புலக்கலைகள், பத்திரிகையியல் என்று பெருவிருட்சமாய் வேரூன்றிக் கிளைபரப்பி நிற்கிறது.

1978 இல் பல்கலைக் கழகத்தில் இணைந்து 1982 இல் தமது கல்வியை நிறைவு செய்த பட்டதாரி மாணவர் தொகுதியினர் இந்தப் பிரமாண்டமான செயற்பாடுகளில் தீவிர ஈடுபாட்டோடு உழைத்துவந்திருக்கிறார்கள்.

வேரிலிருந்து விழுதுவரை ஒன்று சேரும் பெருவிழாவாக அதனைக் கொண்டாடுகிறார்கள். தங்களின் கல்வி ஆசான்களையும், கல்விசாரா ஆளுமைகளையும் கௌரவிக்கும் பெரும் ஏற்பாடுகளைச் செய்து முடித்துள்ளனர்.

'பொற்கலை' என்ற தலைப்பில் 600 பக்கங்கள் கொண்ட பெருந்தொகுதியைப் பெருவிழாவன்று வெளியிட உள்ளனர். இருபது லட்சம் ரூபாய் செலவில் இப்பெருமலர் தயாராகிறது. அரிய புகைப்படங்களுடன், ஐம்பதிற்கும் அதிகமான கட்டுரைகள், கவிதைகளைத் தாங்கிய இம்மலர்ப் பொறுப்பைத் தோளில் சுமந்திருக்கும் எஸ்.மார்க்கண்டு தன் பேருழைப்பிற்கான நல் அறுவடையைச் சாதித்திருக்கிறார்.

இந்தப் பொன்விழாவின் இலட்சிய முத்திரை என்பது, பல்கலைக்கழகத்தில் பயிலும் வசதி குறைந்த மாணவர்களுக்கு உதவும் வகையில்





நிதிசேர்த்தல் இந்த அணியின் பெருநோக்காகும். ஒரு கோடி ரூபாயைத் திரட்டும் இலட்சியத்தில் இறங்கிய இவர்கள் அந்த இலக்கினை எட்டிவிட்ட நிலையில், ஒன்றரைக் கோடியை இன்று தாண்டிவிட்டனர் என்பதும் அந்த இலக்கினை இப்போது இரண்டு கோடியாக உயர்த்தியுள்ளனர் என்பதும் இந்தச் சங்கத்தினரின் அயராத பேருழைப்பு என்பதில் ஐயமில்லை.

இந்தப் பெரும் சாதனைக்கு அடித்தளமிட்டவர் கலாநிதி பாலசிங்கம் பாலச்சந்திரன் ஆவார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் வணிகவியல் பட்டதாரியாக 1982இல் தனது இளங்கலைமாணிப் பட்டத்தை நிறைவு செய்து, விரிவுரையாளராகி, தற்போது கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வளாகத்தில் நிதி முகாமைத்துவத் துறையில் பேராசிரியராகப் பணியாற்றிவருகிறார். இவரே தன்னுடன் பயின்ற மாணவர்களின் துணை கொண்டு இந்தப் பெரும் பணியில் இறங்கியிருக்கிறார். கூடிப்போனால் கைவிரல் எண்ணிக்கையில் அடங்கிவிடக்கூடிய நண்பர்களைக் கொண்டுதான் கோடிக்கணக்கில் இக்கல்விப் பணிக்கான நிதியைத் தேடியிருக்கிறார்கள் என்பது வியப்பூட்டுகிறது.

இவர்களுக்கு அடுத்தடுத்த ஆண்டுகளில் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறிய பட்டதாரிகளையும் இணைத்திருக்கிறார்கள்.

அத்துடன் இந்தப்பழைய மாணவர்களின் தொடர்பில், நல்லுள்ளம் கொண்ட நண்பர்களும் இந்த நல்ல பணியிலே கைகோர்த்திருக்கிறார்கள்.

கலாநிதி பாலச்சந்திரன் , கொழும்புப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராயிருக்கும் தனது மாணவரிடம் நிதிக்குதவக் கேட்டிருக்கிறார். அவரும் உடனேயே பெருந்தொகையை வழங்கியிருக்கிறார்.

திருமதி மிதிலைச்செல்வி, தயானந்தராஜா, திருமதி கௌரி சேதுராஜா, அ.அகிலதாஸ், கலாநிதி புஷ்பரட்ணம் இந்த நிதிச் சேர்க்கையில் லட்சக்கணக்கில் சேர்த்து உதவியுள்ளனர்.

இந்த நல்ல உள்ளங்கள் தங்கள் இலக்கைத் தொட்டிருக்கிறார்கள் என்பது பெருமைப்படத்தக்கது என்பதில் ஐயமில்லை.

நாற்பது வருடங்களுக்கு முன்னால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் பட்டாம்பூச்சிகளாகச் சிறகடித்துத் திரிந்த மாணவியரும், இளமையின் துடிப்பில் உலா வந்த மாணவர் கூட்டமும், இன்று தங்கள் பழைய நாட்களை அன்பாய், ஆசையாய் இரைமீட்டு, தங்கள் சமூகத்திற்கு நல்லது செய்யவேண்டும் என்ற வேணவாவில் இணைந்து இந்த வெற்றிச் சாதனையைச் செய்து முடித்திருக்கிறார்கள் என்பது, இந்த இளம்படையின் ஆசிரியனாக இருந்தவன் என்ற வகையில் பெருமை சேர்க்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொனால்ட் ட்ரம்ப் மூன்றாவது தடவையும் ஜனாதிபதியாக பதவியில் இருக்க முடியுமா?

கார்த்திகே சிங்



**78** வயதான அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மூனாறாவது பதவிக் காலத்துக்கும் ஜனாதிபதியாக இருப்பது குறித்து சிந்திப்பதாக மார்ச் 30 ஆம் திகதி கூறினார். தான் பகிடி விடுவதாக நினைக்க வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். சட்டங்களில் உள்ள 'ஓட்டைகளை' பயன்படுத்தி மூன்றாவது பதவிக்காலத்துக்கும் ஜனாதிபதியாக தன்னால் இருக்கக் கூடியது சாத்தியம் என்றும் அவர் மேலும் கூறினார்.

### அமெரிக்க அரசியலமைப்பு அனுமதிக்குமா?

அமெரிக்க ஜனாதிபதிகள் இரு பதவிக் காலங்களுக்கு தெரிவாவதை மட்டுப்படுத்தும் அரசியலயைப்புக்கான 22 வது திருத்தம் 1951 பெப்ரவரி 27 அங்கீகரிக்கப்பட்டது. அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதி ஜோர்ஜ் வாஷிங்டன் இரு பதவிக்காலங்களுக்கு ஜனாதிபதியாக இருந்த பிறகு மூன்றாவது பதவிக்காலத் துக்கு செல்வதை 1796 ஆம் ஆண்டில் தானாகவே மறுத்தார். அவர் வகுத்த எழுதப்படாத 'இரு பதவிக்கால" முன்னுதாரணத்தை மீறி பிராங்ளின் ரூஸ்வெல்ற் நான்கு பதவிக் காலங்களுக்கு (1933 - 1945) ஜனாதிபதியாக பதவி வகித்ததை அடுத்தே அந்த அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டது.

எவரும் இரு தடவைகளுக்கு மேலாக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதை தடுக்கும் அந்த திருத்தம் எவராவது இன்னொரு ஜனாதிபதியின் பதவிக்காலத்தின் இரு வருடங்களுக்கும் அதிகமான காலப்பகுதியில் ஜனாதிபதியாக பதவி வகித்தால் (உதாரணமாக, ஜனாதிபதி ஒருவர் மரணமடைந்தால் அல்லது பதவி விலகினால் துணை ஜனாதிபதி ஜனாதிபதியாக பதவியேற்பதை போன்று) அவர்கள் மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதை மாத்திரம் அனுமதிக்கிறது. அதன் வாயிலாக அமெரிக்க ஜனாதிபதி ஒருவரின் கூடுதல் பட்ச பதவிக்காலம் பத்து வருடங்களாக (முதலில் பதவியில் இருந்தவரின் பதவிக் காலத்தின் இரு வருடங்களும் முழுமையான இரு பதவிக்காலங்களின் எட்டு வருடங்களும் சேர்த்து) இருக்க முடியும்.

டொனால்ட் ட்ரம்ப் 2016, 2024 ஆம் ஆண்டுகளில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டவர். அடுத்தடுத்து தெரிவு செய்யப்படாவிட்டாலும், அவரது இரு பதவிக் காலங்களுக்கு ( 2017 - 2021, 2025 - 2029) தெரிவு செய்யப்பட்டவர் என்பதால் மூனறாவது பதவிக் காலத்துக்கு செல்வதை 22 அரசியலமைப்பு திருத்தம் எந்த ஐயப்பாட்டுக்கும் இடமில்லாத வகையில் தடைசெய்கிறது.

### சட்டத்தில் ஓட்டை?

22 திருத்தம் நிலைமையை தெளிவாக விளக்குகின்ற போதிலும், சட்ட நியதியை தவிர்த்துச் சுற்றிவளைத்துச் செல்வதற்கு ட்ரம்ப் இரு வழிகளைக் கூறுகிறார். அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி தேர்தல் 2028 ஆம் ஆண்டில் நடைபெறும். அப்போது தற்போதைய துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸை போட்டியிட வைத்து அவரின் துணை ஜனாதிபதி வேட்பாளராக ட்ரம்ப் நிற்பது ஒரு யோசனை. வான்ஸ் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவியேற்க அனுமதிப்பதற்கு அவர் பதவியை துறந்து வழிவிடவேண்டும்.

ஆனால், இந்த தந்திரோபாயத்தை அரசியலமைப்புக்கான 12 வது திருத்தம் தடுக்கிறது. அரசியலமைப்பு ரீதியாக ஜனாதிபதியாக பதவிக்கு வருவதற்கு தகுதி இல்லாத எவரும் அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாக வருவதற்கு தகுதி இல்லாதவராகிறார் என்று அந்த திருத்தம் கூறுகிறது. ட்ரம்ப் இன்னொரு பதவிக் காலத்துக்கு ஜனாதிபதியாக தெரிவாவதை 22 வது திருத்தம் தடை செய்வதால் அவரால் துணை ஜனாதிபதியாகவும் வரமுடியாது.

துணை ஜனாதிபதியை பயன்படுத்துகின்ற மார்க்கம் தடைப்படுகின்ற அதேவேளை, அடுத்தடுத்து பதவிக்கு வருவதற்கு இருக்கின்ற இன்னொரு கோட்பாட்டு ரீதியான பாதையை அமெரிக்காவின் ஒரு அரசியல் விஞ்ஞானப் பேராசிரியரான புரூஸ் ஜி. பீபொடி தனது ஆய்வு அறிக்கை ஒன்றில் விளக்கியிருக்கிறார்.

22 வது அரசியலமைப்பு திருத்தம் ஒருவர் இரு தடவைகளுக்கு மேலாக ஜனாதிபதியாக 'தெரிவாவதை' (Elected) தடுக்கிறது. ஆனால், இரு பதவிக்காலங்களுக்கு அப்பால் 'பதவியில் இருப்பதை" (Serving) அது தடுக்கவில்லை. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இரு தடவைகள் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஒருவர் இன்னொருவருக்கு பதிலாக (Line of succession) பதவிக்கு வருவதன் மூலம் அமெரிக்க ஜனாதிபதியாக முடியும். அமெரிக்க காங்கிரஸின் ஜனப்பிரதிநிதிகள் சபையின் சபாநாயகராக உறுப்பினர்களினால் தெரிவு செய்யப்படுபவர் காங்கிரஸின் ஒரு உறுப்பினராக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ட்ரம்ப் அவ்வாறாக சபாநாயகராக தெரிவாக முடிந்தால், (ஜனாதிபதியும் துணை ஜனாதிபதியும் பதவியில் இருந்து விலகும் பட்சத்தில்) மீண்டும் ஜனாதிபதியாக வரமுடியும் என்று பேராசிரியர் பீபொடி கூறுகிறார்.

22 வது அரசியலமைப்பு திருத்தத்தை இரத்துச் செய்வது மூன்றாவது பாதை. அது பெரிதும் சாத்தியமில்லை. அந்த திருத்தத்தை இரத்துச் செய்ய வேண்டுமானால் காங்கிரஸின் இரு சபைகளிலும் (ஜனப்பிரதிநிதிகள் சபையும் செனட்சபையும்) மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் தேவை அல்லது அரசியலமைப்பு பேரவையை கூட்ட வேண்டும். அந்த செயன்முறை ஒருபோதும் பயன்படுத்தவில்லை. அரசியலமைப்பு பேரவையை கூட்டி 22 வது திருத்தத்தை இரத்துச் செய்வதானால் 50 மாநில சட்ட சபைகளின் மூன்றில் இரண்டு சபைகளின் (34) ஆதரவும் அடுத்து நான்கில் மூன்று சபைகளின் ( 38) அங்கீகாரமும் தேவை. அமெரிக்காவின் தற்போதைய அரசியல் கோலங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது அரசாயலமைப்பு திருத்தம் ஒன்றை ட்ரம்ப் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கான (கடந்த 33 வருடங்களாக அவ்வாறு செய்யப்படவில்லை) சாத்தியப்பாடு அறவே கிடையாது.



### பதவிக்காலங்களை நீடித்த தலைவர்கள்

உலகம் பூராவும் பல தலைவர்கள் மிகவும் சாதுரியமான முறையில் அரசியலமைப்பு மட்டுப்பாடுகளை மாற்றியமைத்திருக்கிறார்கள். உதாரணமாக, விளாடிமிர் புட்டின் ரஷ்யாவின் ஜனாதிபதியாக இரு பதவிக்காலங்களுக்கு பிறகு ( 2000 -2008) 1993 ஆண்டின் அரசியலமைப்பின் 81(3) சரத்தின் கீழ் 'தொடர்ச்சியான' இரு பதவிக்கால மட்டுப்பாட்டு எல்லையை அடைந்தார். பிறகு அந்த எல்லையை சட்ட நியதிகளை தவிர்த்து சுற்றிவளைப்பதற்காக அவர் ( 2008 - 2012 ) பிரதமரானார். அவரின் நேச அணியான டிமிட்ரி மெட்வெடேவ் ஜனாதிபதியாகி முன்னர் இருந்த நான்கு வருட பதவிக்காலத்தை ஆறு வருடங்களாக நீடித்தார். 2012 ஆண்டிலும் 2018 ஆம் ஆண்டிலும் மீண்டும் ஜனாதிபதியாக வந்த புட்டின் அவருக்கு விசுவாசமான பாராளுமன்றத்தினதும் (டுமா) நீதீத்துறையினதும் ஆதரவுடன் 2020 ஆண்டு கொண்டுவந்த அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலமாக பதவிக்காலங்களின் எண்ணிக்கையை மாற்றியமைத்தார். அதன் மூலமாக அவர் 2036 ஆம் ஆண்டுவரை ஜனாதிபதி பதவியில் அவரால் தொடரமுடியும்.

துருக்கியில் பிரதமராக இருந்த றிசெப் தயிப் எர்டோகான் ( 2003 -- 2014) ஜனாதிபதியாக வந்து 2007 ஆம் ஆண்டில் நடத்திய சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலமாக ஜனாதிபதியின் பதவிக்கால மட்டுப்பாட்டை இல்லாமல் செய்ததுடன் துருக்கியின் ஆட்சிமுறையை ஜனாதிபதி ஆட்சாமுறையாக மாற்றியமைத்தார்.

அதேபோன்றே சீனாவிலும் சி ஜின் பிங் ஜனாதிபதியின் இரு பதவிக்கால மட்டுப்பாட்டை 2018 ஆம் ஆண்டில் இல்லாமல் செய்தார். இந்த மாற்றம் அவர் காலவரையறையின்றி சீனாவை ஆட்சி செய்வதற்கு அவரை அனுமதித்தது. அதன் மூலமாக அவர் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அரசு மீதான தனது பிடியை பலப்படுத்திக் கொண்டார்.

அதேவேளை, பல தலைவர்கள் சட்டங்களை மாற்றி எழுதாமலேயே பல வருடங்கள் ஆட்சி செய்கிறார்கள். ஜேர்மனியில் அதிபர்களுக்கு பதவிக்கால மட்டுப்பாடு இல்லை. ஆனால், தொடர்ச்சியாக பல பதவிக் காலங்களுக்கு ஆட்சியில் இருப்பதற்கு பாராளுமன்றத்தின் ஆதரவு தேவை. அஞ்ஜெலா மெர்கெல் 16 வருடங்கள் ஜேர்மனியின் அதிபராக பதவியில் இருந்தார். அதேபோன்றே கனடாவிலும் பிரிட்டனிலும் பிரதமர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட பதவிக் காலங்கள் கிடையாது. அவர்கள் தங்களது கட்சியின் நம்பிக்கையை தக்கவைக்க முடியுமானால் காலவரையறையின்றி பதவியில் தொடர முடியும்.

### இந்திய பிரதமர்

அமெரிக்க ஜனாதிபதி ஆட்சிக் கட்டமைப்பைப் போலன்றி, இந்திய பாராளுமன்ற ஆட்சிமுறை பிரதமருக்கு பதவிக்கால மட்டுப்பாடுகளை விதிக்கவில்லை. அவரின் பதவிக்காலங்கள் (அரசியலமைப்பின் 75 (3) சரத்தின் பிரகாரம் லோக்சபாவின் நம்பிக்கையை தொடர்ந்து தக்கவைப்பதில் தங்கியிருக்கிறது. இது முறைமை வாக்காளர்களின் இறைமை, ஜனநாயக நெகிழ்ச்சி மற்றும் பாராளுமன்ற பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதிசெய்வதுடன் மக்களின் நம்பிக்கையை தொடர்ந்து தக்கவைக்கக் கூடிய தலைவர்கள் நீண்ட காலத்துக்கு பதவியில் இருப்பதை அனுமதிக்கிறது.

உதாரணமாக, தற்போதைய பிரதமர் நரேந்திர மோடி 2029 ஆம் ஆண்டுவரை (15 வருடங்கள்) பதவியில் இருக்க முடியும். ஆனால், நம்பிக்கையில்லாப் பிரேரணை போன்ற ஏற்பாடுகளையும் இந்த முறைமை உள்ளடக்கியிருக்கிறது. அது வரலாற்றில் வி.பி.சிங்,(1990), எச்.டி. தேவகௌடா (1997), அடல் பிஹாரி வாஜ்பாய் (1999) போன்ற பிரதமர்களின் பதவிக் காலங்களை முடிவுக்கு கொண்டு வந்தது. மேலும், கிரமமான தேர்தல்கள், கூட்டணி அரசியல், பாராளுமன்ற விவாதங்கள், நீதித்துறையின் மேற்பார்வை மற்றும் சுதந்திரமான பத்திரிகைத்துறை ஆகியவை துடிப்புமிக்க ஒரு ஜனநாயக சமநிலையை உறுதிசெய்கின்றன.

(தி இந்து )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரா. ஜெயச்சந்திரன்,**
**பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** தமிழினப் படுகொலைக்கான நீதியை கோரிப் பெற்று, எமது அரசியல் இலக்கை அடையும் வரை தொடர்ந்து போராடவேண்டிய நிர்ப்பந்தத்தி லுள்ள நாம், காலச்சூழலும் - களச்சூழலும் தந்திருக்கும் தற்காலிகப் பின்னடைவுகளைக் காரணம் காட்டி நிரந் தர வெற்றியை இழக்கும் நிலைக்கு வந்துவிடக் கூடாது என்று தமிழ் அரசு கட்சியின் பாராளுமன் றக்குழுத் தலைவர் சிவ ஞானம் சிறிதரன் கூறியி ருக்கிறாரே. அரசியல் இலக்கை அடையும்வரை போராடவேண்டும் என்கி றாரே. அதனை அடையும் வழியையும் சொன்னால் தானே நாம் நம்புவதற்கு?



**வியுக்தியார்:** என்ன கேள்வி இது. வழியைச் சொன் னால் பின்னர் எதிரிகள் அதனை மூடியல்லவா போடு வார்கள். எப்படி வழியைச் சொல்வது. அவருக்கு வழி தெரியும் என்று நினைக்கின்றேன். சுமந்திரனோடு தலை மைப் பதவிக்கு போராடியே வெற்றிபெறமுடியா மல் தடுமாறிக்கொண் டிருக்கும் அவரால் எப்படி நமது உரி மையை போராடி வெற்றிபெறமுடியும் என்று நீங்க ள் கேட்டால், நிச்சய மாக என்னிடம் பதில் இல்லை. அவருடைய கிளிநொச்சி தளபதியே வேட்புமனு தாக்கல் முடிந்த பின்னர் யாழ்ப்பாணம் தேடிவந்து சிவஞானம் ஐயாவிடம் ஆசிபெற்று சென்றிருக்கிறார் என்றால், அவர்கூட சிறிதரனை கைவிடத் தயாராகி விட்டார் போல அல்லவா தெரிகின்றது. அவர் தற்கா லிக பின்னடைவு என்று இதனைத்தான் சொல்கிறாரோ தெரியவில்லை.

---

**இ. கந்தசாமி, சித்தன்கேணி.**

**கேள்வி:** உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறும் அவ்வாறு செய்யாவிட்டால் ஒதுக்கப்பட்ட நிதியை கையாள்வகில் கடைகள் ஏற்படுமென மிரட்டும் தொனி யில் அமைச்சர்கள் தேர்தல் பிரசாரம் செய்வதாக தமிழ் அரசு கட்சியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தி யலிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளாரே. வடக்கு மாகாணத்தின் அபிவிருத் திக்கு ஒதுக்கப்பட்ட நிதியை ஆளும் கட்சி உரிமை கோர முடி யாது என்றும் அவர் கூறியிருக் கிறாரே?




**வியுக்தியார்:** அது சரிதான். ஆனால் நல்லாட்சி அர சின் காலத்தில் வடக்கு மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கு அவரது கட்சியின் தற்போதைய பதில் செயலா ளர் உரிமைகோரியது எப்படி என்றுமல்லவா அவர் சொல்லவேண்டும். அதை விட, ஆளும்கட்சிக்கு வாக்க ளிக்காவிட்டால் ஒதுக்கப் பட்ட நிதியை கையாள் வதில் தடைக்ள் ஏற்படும் என்று தேசிய மக்கள் சக்தி மிரட்டு கின்றது என்கிறாரே, தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித் தால் தமிழர்களின் இருப் புக்கு ஆபத்து வந்து விடும் என்று சொல்வதும் தமிழ் மக்களை மிரட்டு வதுபோலத் தானே?.

---

**எம். ரமணன்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**



**கேள்வி:** தமக்கு எதி ரான மக்கள் போராட்டங் களை கையாள பயங்கர வாத தடைச் சட்டம் என். பி. பி. எனப் படும் ஜே. வி. பிக்குத் தேவையாக உள் ளது என்று ஜன நாயக தமிழ்த் தேசிய கூட்டணி யின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித் துள்ளாரே. அத்தோடு நின்று விடவில்லை, கடற் தொழில் அமைச்சர் இரா. சந்திர சேகர் தமிழ் மக்களை மிரட்ட நினைத்தால் அது அவரது இயலா மையாக இருக்கும். ஏனெனில் தமிழ்த் தரப்பு இவ ரைப்போல பலரை, பலரது மிரட்டலை கண்ட வர்கள் என்றுமல்லவா கூறியிருக்கிறார்?.




# வியுக்தியார் பதில்கள்

**வியுக்தியார்:** அவர் சொன்னால் சரியாகத்தானே இருக்கும். மன்னர் காலத்திலிருந்து இப்படித்தானே நடக் கின்றது. அதிகாரத்தில் இருப்பவர்கள் மக்களை எப்போதும் எதையாவது காட்டி அடக்கி ஆளத்தானே நினைப்பார்கள். அதிகம் ஏன், வடக்கு கிழக்கு மாகா ணங்கள் இணைந்து இருந்தபோது முதல்முதலாக ஆட்சி யில் இருந்தவர்கள் சுரேஷின் ஈபிஆர்எல்எவ் கட்சியினர் தான். அவர்கள் அந்த மாகணத்தை ஆட்சிசெய்தபோது-அதாவது அதிகாரத்தில் இருந்தபோது எப்படி தமிழ் மக்களை மிரட்டி ஆட்சிசெய்தார்கள் என்பது அவருக் குத் தெரியாததா?. அதுதான் அவர் தமிழ் மக்கள் பலரது மிரட்டல்களை கண்டவர்கள் என்றிருக்கிறார் போலும்.

---

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பளை.**

**கேள்வி:** மணல் கொள்ளையில் ஈடுபட்டவர்கள், ஊடகவியலாளர்களை கொலை செய்தவர்கள், பிரஜை களை கடத்தி காணாமலாக்கியவர்கள் என்று யாழ்ப்பா ணத்திலும் உள்ளார்கள். அவர்கள்மீதும் நட வடிக்கை களை நாம் எடுப்போம் என்று கடற் றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் இ. சந்திரசேகர் தெரிவித் துள்ளாரே. அவர் யாரைக் குறிப்பிடுகின் றார் என்பது நமக்கு தெரிந்ததுதான். அது நடக்கும் என்று நினைக் கின்றீர்களா?.



**வியுக்தியார்:** அவர் சொல்வது யாரை என்று உங்க ளுக்கு தெரி கின்றதுபோலத் தெரி கின்றது. ஆனால் அவர் ஒருவரை மட்டும் குறிப்பிடவில்லையே, இது போன்ற குற்றங்களைச் செய்தவர்கள் பலர் அல்லவா இருக்கின் றனர். 'நாட்டின் சொத்துக்களை வெளிநாடுகளில் பதுக்கிவைத்திருக்கிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அதனை நாட்டுக்கு கொண்டுவருவோம்" என் றார்கள். இப்போது சில அரசியல்வாதிகள் மீது நட வடிக்கை எடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால், ஒருவர் 15 லட்சம் லஞ்சம்வாங்கியதற்காக கைது செயய்ப்பட்டார். இன்னுமொருவர் 10 லட்சம் ரூபாவை முறைகேடாக பெற்றதாக கைதாகியிருக்கிறார். ஆனால் பெரும் 'முத லைகள்' இன்னமும் வெளியே தானே இருக்கிறார்கள். மணல்கொள்ளை பற்றியும் நமது அமைச்சர் சந்திர சேகர் பேசியிருக்கிறார். ஆனால் கடந்த மாதம் ஒரு ரிப்பர் மணல் ஐம்பதாயிரத்திற்கு வாங்கினேன். இப் போது எண்பது ஆயிரத்திற்கும் பெற முடியவில்லையே. அது எதனால் என்றும் அமைச்சர் கொஞ்சம் கவனம் செலுத்தினால் நல்லது.

---

**சு. தில்லைநாதன்**
**கொழும்புத்துறை.**

**கேள்வி:** அரசாங்கத்திற்கு நாட்டை மேம்படுத்தும் திட்டங்களை நிறைவேற்ற அவகாசம் கிடைத்தால், எதிர்க்கட்சியினருக்கு எதிர்காலமும் இல்லையென்பதை



உணர்ந்து, அவர்களே இப்போது அரசை கவிழ்க்க கும்ப லாக சதித்திட்டங்களில் ஈடுபட்டு வருவதாகவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு எதிர்க்கட்சி கள் சதித் திட்டங்களில் ஈடுபட்டு வருவதாகவும் அமைச்சர் சமந்த வித்தியாரட்ன குற்றம் சாட்டியுள் ளாரே.

**வியுக்தியார்:** தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தபோது, அவர்கள் ஐந்து ஆண்டுகளும் ஆட்சியில் தொடரமாட்டார்கள் என்றே பலரும் நம்பினர். ஆனால் அரசாங்கம் இவர்கள் நினைத்ததுபோல இல்லாமல், ஐந்து ஆண்டுகளை மாத்திரமல்ல, அதற்கும் மேலாகவும் ஆட்சிசெய்யலாம் என்ற அளவிற்கு அவர்களின் தற்போ தைய நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் அதற்காக இந்த அரசாங்கத்தை கவிழ்க்க எதிர்க்கட்சிகள் கூட்டாக சதித்திட்டம் தீட்டு கின்றன என்பதை நம்பமுடியவில்லை. எதிர்க்கட்சிகள் இடையே அப்படியொரு ஒற்றுமை எற்பட வாய்ப்பு இல்லை என்றே தெரிகின்றது. எதிர்க்கட்சிகள் இடையே தலைமைப் பதவிக்காக உட்கட்சி மோதல்கள் தான் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றனவே தவிர அவர்கள் ஒற்றுமைப்படுவதற்கான எந்த அறிகுறியையும் காண வில்லையே. இப்படி இருக்கையில் அரசாங்கத்தை கவிழ்க்க கும்பலாக சதித்திட்டங்களில் ஈடுபடுவதாக கூறப்படுவதை நம்பமுடியவில்லை. அப்படி ஒரு 'தில்'லும் அவர்களுக்கு இல்லையே.

---

**எஸ். செந்துஜன்,**
**ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் கட் டப்பட்டு இந்திய அரசாங்கத்தால் தற்போது பராமரிக் கப்பட்டு வரும் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தை, யாழ்ப்பாணம் மாநகர சபை எதிர்காலத் தில் இயக்குவது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் அண்மையில்




நடைபெற்றுள்ளதே. ஆளுநராவது இதற்கான முயற்சி யில் வெற்றிபெறுவாரா?

வியுக்தியார்: அந்த மண்டபம் இந்திய அரசாங்கத் தால் கட்டிக்கொடுக்கப்பட்டாலும் இது யாழ்ப்பாண மாநகரசபைக்கு சொந்தமான காணியில்தான் கட்டப்பட்டிருக்கின்றது. அதனை கட்டி முடித்ததும் இந்திய அரசு மாநகரசபையிடம் கையளிக்க முன்வந்த போது அதனை பராமரிக்க தம்மால் முடியாது என்று அப்போது முதல்வராக இருந்த (தமிழ் அரசின்) முதல் வர் அதனை பொறுப்பேற்க முன்வரவில்லை.


நீண்டு இழுபறி - காத்திருப்புக்கு பின்னர் இந்திய அரசே ஐந்து ஆண்டுகளுக்கு அதனை பராமரிக்கும் செலவை பெறுப் பேற்றிருந்தது. இப்போது அந்த ஐந்து ஆண்டுகள் நிறைவடையவிருப்பதால், அது மீண்டும் இழுபறியில் வந்துவிடக்கூடாது என்பதற்காக ஆளுநர் அதனை மாநகரசபை பெறுப்பேற்பது குறித்து ஆராய்ந்திருக்கி றார். மீண்டும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பி னர்கள் மாநகர நிர்வாகத்தை பொறுப்பேற்றுவிட்டால், என்ன நடக்கும் என்பது நமக்கு தெரிந்ததுதானே. இப் போதே ஆளுநர் தனக்கிருக்கும் அதிகாரத்தை பயன் படுத்தி அந்த நிலையத்தில் உள்ள மண்டபங்களை தனி யாருக்கு வாடகைக்கு விடுவதற்கான கேள்விப்பத்திரங் களைக் கோரி, தனியாரிடம் ஒப்படைத்தால், அதனை நிர்வகிப்பது மாநகரசபைக்கு இலகுவாகிவிடும். தற்செய லாக மீண்டும் பழையவர்கள் ஆட்சிக்கு வந்தால் 'மீண் டும் வேதாளம் முருங்கை மரத்தில் எறிய' கதையாக இது தொடர்ந்துவிடும். அதற்கு முன்னதாக ஆளுநர் முயற்சி செய்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேசியாவில் ரஷ்ய விமான தளம்?

# அவுஸ்திரேலிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா




இந்தோனேசியா தென்கிழக்கு ஆசியா முழுவதும் பரந்து விரிந்துள்ள ஒரு பரந்த தீவுக் கூட்டம். அத்துடன் பப்புவா பகுதி பசிபிக் பெருங்கடலுக்கான நுழைவுப் புள்ளியாகும். அங்குள்ள பியாக் விமானப்படைத் தளம் வடக்கு அவுஸ்திரேலியாவில் உள்ள டார்வினிலிருந்து 1,300 கி.மீ தொலைவில் உள்ளது.

தற்போது பப்புவா மனுஹூவாவில் விமான தளத்தை அமைக்க முயன்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்கு ரஷ்யா பதில் அளித்துள்ளது. அதேவேளை இந்தோனேசியாவிடம் தனது நீண்ட தூர விமானங்களை அங்கு நிறுத்த அனுமதி கோரியதை ரஷ்யா மறுக்கவில்லை. அதே நேரத்தில் அவுஸ்திரேலியாவின் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் திட்டத்தையும் கடுமையாக ரஷ்யா சாடியுள்ளது.

போரின் நடுவிலும் ரஷ்யா பொருளாதார முயற்சிகளை ஆசியாவில் குறிப்பாக இந்தோனேசியவில் தொடர்ந்துள்ளது. அண்மையில் இந்தோனேசியாவின் ஜனாதிபதி பிரபோவோ சுபியாண்டோ, ரஷ்யாவின் முதல் துணைப் பிரதமர் டெனிஸ் மந்துரோவை ஜகார்த்தாவிற்கு வரவேற்று, சுதந்திர வர்த்தகத்தைப் பற்றி விவாதிக்கவும், இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75 ஆண்டுகளைக் குறிக்கவும் உதவினார்.

இந்தோனேசியவில் ரஷ்யா விமான தளத்தை அமைக்க முயன்ற செய்தி வெளியானதுடன் அவுஸ்திரேலிய எதிர்க்கட்சி தலைவர் பீட்டர் டட்டன் உடனடியாக ஆளும் அரசாங்கம் மீது, வெளியுறவுக் கொள்கையில் தோல்வி என்று குற்றம் சாட்டினார்.

எதிர்க்கட்சி தலைவர் பீட்டர் டட்டன் அரசியல் ஆதாயத்திற்காகவே தேவையற்ற கருத்துக்களை கூறுவதாக அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார். அரசின் கொள்கைகளை மதிக்காமல், அரசியல் இலாபத்திற்காக தாக்குதல்களை தீவிரப்படுத்தியமைக்கு ஊடகங்களும் கண்டனம் தெரிவித்துள்ளன.



இந்த விவகாரம் குறித்து அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் திரு. மார்லஸ் கூறுகையில், ரஷ்யா இப் பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்த ஈடுபட்டுள்ளது என்பது எங்களுக்குத் தெரியும். ரஷ்யா அவ்வப்போது ஆசிய பிராந்தியத்தில் மூக்கை நுழைக்க விரும்புகிறது என்பது எங்களுக்குத் தெரியும் என்றும் அவர் கூறினார்.

ஆனால் அது தொடர்பாக எங்களுக்குத் தெரிந்த அனைத்தையும் நான் பொதுவில் உடனடியாக வெளியிடப் போவதில்லை. முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்தோனேசியாவின் பாதுகாப்பு அமைச்சர் இந்தோனேசியாவிலிருந்து ரஷ்ய விமானங்கள் இயக்கப்படுவதற்கான எந்த வாய்ப்பும் இல்லை என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவுபடுத்தியுள்ளார் என்றும் அவர் கூறினார்.

இந்தோனேசியாவில் இவ்வருட பெப்ரவரியில் ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்குவுடன் நடத்திய சந்திப்பின் பின்னரே இந்த விமான தளம் உருவாக்கப்படுவது குறித்து விவாதிக்கப்பட்டது. ஆயினும் இந்தோனேசியா அரசு விமான தளம் அமைக்க ரஷ்யாவின் கோரிக்கை பற்றிய செய்திகளை மறுக்கிறது. இந்தோனேசியா தனது விமான தளத்தில் ரஷ்ய விமானங்களை தங்க வைக்காது என்பதை அவுஸ்திரேலிய அதிகாரிகளும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதேவேளை இந்தோனிசியாவில் உள்ள அவுஸ்திரேலிய தூதரகமும் இது தொடர்பில் அவதானம் செலுத்தி வருகிறது.

அவுஸ்திரேலியாவின் வடக்கு வாசலாகக் கருதப்படும் இந்தோனேசியாவின் தொலைதூர பகுதியான பப்புவா பிராந்தியத்தில் இராணுவ விமானங்களை நிலை நிறுத்தவதற்கு ரஷ்யா முயற்சியால் பரபரப்பான கன்பரா அரசியல் சூழல், தற்போதைய தேர்தல் காலத்தில் மிகவும் சூடு பிடித்துள்ளது.

இது தொடர்பில் அவுஸ்திரேலியா கூடிய அவதானிப்பை செலுத்தியுள்ளது என்றும், அவுஸதிரேலிய அதிகாரிகள் மேலதிக தகவல்களை திரட்டிவருகின்றனர் என்று அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸி தெரிவித்தார்.



**சோவியத் வீழ்ச்சியின் பின்னர், தென்னாசிய பிராந்தியத்தில் ரஷ்யா செலுத்தி வந்த ஆதிக்கம் வீழ்ச்சி அடைந்தது. ஆனாலும் கடந்த சில வருடங்களாக இந்தோனேசிய கூட்டாளிகளுடனும் ஒட்டுமொத்த தென்கிழக்கு ஆசியாவுடனும் நெருக்கமாக உறவுகளை வளர்க்க மாஸ்கோ முயலுகின்றது.**

இந்த பிராந்தியத்தில் ரஷ்யா தனது செல்வாக்கு செலுத்த முற்படுவதை நாம் விரும்பவில்லை எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

ஆனாலும் இந்தோனேசியாவில் வெளிநாட்டு இராணுவ விமானங்கள் அமைந்திருப்பது என்ற யோசனை அந்நாட்டின் சுயாதீன வெளியுறவுக் கொள்கை நிலைப்பாட்டிற்கு ஏற்றதாக இருக்கும் என்று பிரதமர் கூறினார்.

பப்புவாவில் உள்ள மனுஹூவா தளத்தில் நீண்ட தூர விமானங்களை நிலைநிறுத்த மாஸ்கோவின் முயற்சிகள் குறித்த விடயம் அவுஸ்திரேலியாவில் ஒரு கடுமையான அரசியல் விவாதத்தைத் தற்போது தூண்டிய உள்ளது. ஆனாலும் இந்தோனேசியாவின் பாதுகாப்பு அமைச் சர் அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் ரிச்சர்ட் மார் லஸூக்கு ஜகார்த்தா இதனை அனுமதிக்காது என்று உறுதியளித்தார்.

இதேவேள இந்தோனேசியவில் விமானப்படை தளத்தை அணுகுவதற்கு மாஸ்கோ முயற்சித்ததை இந்தோனேசிய அரசு திட்டவட்டமாக மறுக்கவில்லை. அத்துடன் இந்தோனேசியாவின் பாதுகாப்பு அமைச்சரும் ஜனாதிபதி பிரபோவோ சுபியாண்டோவும் இந்த விடயத்தைப் பற்றி பகிரங்கமாகப் பேசவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சோவியத் வீழ்ச்சியின் பின்னர், தென்னாசிய பிராந்தியத்தில் ரஷ்யா ஆதிக்கம் வீழ்ச்சி அடைந்தது என்பது உண்மையாகும். ஆனாலும் கடந்த சில வருடங்களாக இந்தோனேசிய கூட்டாளிகளுடனும் ஒட்டுமொத்த தென்கிழக்கு ஆசியாவுடனும் நெருக்கமாக உறவுகளை வளர்க்க மாஸ்கோ முயலுகின்றது.

இந்தோனேசியாவும் ரஷ்யாவும் கடந்த ஆண்டு தங்கள் முதல் கூட்டு கடற்படைப் பயிற்சிகளை நடத்தின. அதே நேரத்தில் ஜனாதிபதி பிரபோவோ சுபியாண்டோ கடந்த அக்டோபரில் மாஸ்கோவிற்கு விஜயம் செய்தார்.

இந்த வருட பெப்ரவரியில் ரஷ்ய கூட்டமைப்பு பாதுகாப்பு கவுன்சிலின் செயலாளர் செர்ஜி ஷோய்கு, பாதுகாப்பு உறவுகளை ஆழப்படுத்துவது குறித்து விவாதிக்க ஜகார்த்தாவுக்கு விஜயம் செய்தார்.

கடந்த வருடம் மாஸ்கோவில் ஜனாதிபதி புட்டினும் ஜனாதிபதி பிரபோவோவும் நடத்திய சந்திப்பு மிக முக்கியமானதாகும். ரஷ்ய கூட்டமைப்புக்கும் இந்தோனேசிய குடியரசுக்கும் இடையிலான அரசுகளுக்கிடையேயான உறவுகளை வலுப்படுத்தி ஒருங்கிணைக்க வேண்டிய தேவை உள்ளது என்று இரு தலைவர்களும் தெரிவித்தனர்.


ரஷ்ய - இந்தோனேசிய ஆயுதப் படைகளுக்கு இடை யிலான தொடர்பு, விமானப்படைகளுக்கு இடையி லான ஒத்துழைப்பு உட்பட பல்வேறு விவகாரங்களில் முன்னேற்றம் கண்டுள்ளதாக இச்சந்திப்பின் போது ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், இந்தோனேசிய ஜனாதிபதி பிரபோவோ கூட்டாக அறிவித்துள்ளனர்.

இத்தகைய ஒத்துழைப்பு இரு தரப்பினரின் தற்காப்புத் திறன்களை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எந்த மூன்றாம் நாடுகளுக்கும் எதிராக அல்ல என்றும், மேலும் ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பிற்கு எந்த அச்சுறுத்தலையும் ஏற்படுத்தாது எனவும் கூறினர்.

மேலும் இரு நாட்டு விமானப்படைகளுக்கு இடையிலான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுதுடன், எதிர்கால இராணுவ ஒத்துழைப்பு குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டன.

இதன் காரணமாகவே ரஷ்யாவும் இந்தோனேசியாவும் கடந்த ஆண்டு கூட்டு கடற்படை பயிற்சிகளை நடத்தின.

இந்தோனேசியா உலகின் நான்காவது அதிக மக்கள்



தொகை கொண்ட நாடாகவும், தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய பொருளாதாரமாகவும் இருக்கிறது.

இந்தோனேசியாவும் சமீபத்தில் பிரிக்ஸ் குழுவில் இணைந்தது. இதில் ரஷ்யா ஒரு நீண்ட கால நிறுவன உறுப்பினராக உள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் ரஷ்ய-இந்தோனேசிய வர்த்தகம் 80 வீதம் அதிகரித்து, 2024 ஆம் ஆண்டில் 4.3 பில்லியன் டாலர்களை எட்டியுள்ளதாக ரஷ்ய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ரஷ்யா ஆயுத ஏற்றுமதியில் இத்தோனேசியாவும் முக்கிய பங்கு வகிக்கிறது. ரஷ்யா உலகம் முழுவதும் ஆயுதங்களை விற்க தீவிரமாக முயற்சிகளை மேற்கொள்கிறது.

மேலும் அதிக பதற்றம் உள்ள ஆசிய பிராந்தியத்தில் ஆயுத விற்பனையை அதிகரிக்க அமெரிக்காவும், ரஷ்யாவும் போட்டி போடுகின்றன. மேலும் இந்த ஆசிய வாடிக்கையாளர்களை குறிவைத்து இரு முக்கிய ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நாடுகள் தங்கள் அணியில் ஈர்க்க முயல்கின்றன. இதன் விளைவாக இத்தகைய புதிய விமான தளங்கள் உருவாக வாய்ப்புள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட மியான்மரில் ரஷ்யா ஒரு முக்கிய நட்பு நாடாகவும் ஆயுத விநியோகஸ்தராகவும் உள்ளது. இந்த ஆண்டு, மியான்மரின் இராணுவத் தலைவர் ஆறு யானைகளை பரிசாக வழங்க மாஸ்கோவிற்குச் சென்றார். இதற்கு ஈடாக மியான்மருக்கு ஆறு ரஷ்ய போர் விமானங்களை வழங்கியது.

மியான்மரில் ஒரு சிறிய அளவிலான அணு மின் நிலையத்தை உருவாக்குவது தொடர்பான ஒப்பந்தத்திலும் இரு நாடுகளும் கையெழுத்திட்டன. ரஷ்யா இதுபோன்ற நீண்டகால கூட்டாண்மைகளுக்கு மற்றய தென்னாசிய நாடுகளை வெற்றிகரமாக இணைத்து வருகிறது.

ஆனால் தென்கிழக்கு ஆசியாவில் சோவியத் கால ஆதிக்கத்தை பெற இதுவரை முடியவில்லை. அந்த கால கட்டத்தில் இருந்தே இந்தியாவுடன் நெருக்கமாக இருக்கும் ரஷ்யா மேலும் தனது நட்பு வட்டத்தை விரிவுபடுத்த தீவிரமாக முயற்சித்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையானின் கைதை பயன்படுத்தி

# அநுர அரசாங்கம் தீட்டும் திட்டத்தை ரணிலும் கம்மன்பிலவும் நன்கு அறிவர்

கொழும்பு, ஏப். 20

**பிள்ளையானின் கைதினைப் பயன்படுத்தி அரசியல் இலாபம் பெற முற்படும் தரப்பினரும் உள்ளனர். அந்த வகையில் அநுர அரசாங்கத்தின் திட்டம் என்ன என்பதை ரணில் விக்கிரமசிங்கவும் கம்மன்பிலவும் நன்கு அறிவார்கள். நாட்டில் சட்டத்தின் ஆட்சி என்பது விளையாட்டல்ல என்பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தற்போது பொலிஸாரைப் பயன்படுத்தி அரசாங்கம் புதிய செய்தியொன்றை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. பிள்ளையான் இந்த நாட்டை பிளவுபடுத்துவதற்காக போராடிய பயங்கரவாதியாவார்.

அதன் பின்னர் பிரபாகரனுக்கு எதிராக கருணாவுடன் இணைந்து பிரபாகரனை தோற்கடிப்பதற்காக இராணுவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினார். அவர் பாராளுமன்றத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தியிருக்கின்றார்.

எவ்வாறிருப்பினும் அவரைப் பற்றி எமக்கு நற்சான்றிதழ் வழங்க முடியாது. ஆனால், அவர் தவறிழைத்திருந்தால் அவரைக் கைது செய்வதற்கான உரிமை அரசாங்கத்துக்கு இருக்கிறது.

கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் கடத்தப்பட்டமை தொடர்பில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும். இதனை அடிப்படையாகக் கொண்டே பிள்ளையான் கைது செய்யப்பட்டதாக அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

அதன் பின்னர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை அடிப்படையாகக் கொண்டே அவர் கைது செய்யப்பட்டதாக ஜனாதிபதி அநுரகுமார கூறுகின்றார். பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான பரஸ்பரம் இதன் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிள்ளையான் தொடர்பில் விசாரிப்பதாக பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

அதேபோன்று, சட்டத்தரணி என்ற ரீதியில் உதய கம்மன்பில பிள்ளையானை சந்தித்ததை குற்றப்புலனாய்வுப் பிரிவினரே செய்தியாக வெளியிட்டனர்.

பயங்கரவாதியாகவே இருந்தாலும் சட்ட ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை எவருக்கும் இருக்கிறது. அந்த வகையில் பிள்ளையானுக்காக எந்த சட்டத்தரணி முன்னிலையானால் அரசாங்கத்துக்கு என்ன பிரச்னை?

அதேபோன்று, சேவை பெறுநரின் விருப்பத்துக்கமைய அவர் சார்ந்த விடயங்களை சட்டத்தரணியால் மூன்றாம் தரப்புக்கு தெரிவிக்கவும் முடியும். எவ்வாறிருப்பினும் இதில் அரசியல் இலாபம் பெற முற்படும் தரப்பினரும் உள்ளனர்.

அந்த வகையில் அரசாங்கத்தின் திட்டம் என்ன என்பதை ரணில் விக்கிரமசிங்கவும் உதய கம்மன்பிலவும் நன்கு அறிவார்கள். நாட்டில் சட்டத்தின் ஆட்சி என்பது விளையாட்டல்ல என்பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்”- என்றார். (எ)

அப்பாவி ஒருவரை கைது செய்ததாக கூறி

# அனுதாபத்தை ஏற்படுத்த கம்மன்பில தீவிர முயற்சி

கொழும்பு, ஏப். 20

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்துக்காக பிள்ளையான் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை. துணைவேந்தர் ஒருவரை கடத்தி, காணாமலாக்கிய குற்றச்சாட்டுக்காகவே கைது செய்யப்பட்டார். குண்டுத்தாக்குதல் விவகாரத்தில் அப்பாவி ஒருவரை கைது செய்துள்ளதாக அனுதாபத்தை ஏற்படுத்தவே உதய கம்மன்பில முயற்சிக்கிறார் என கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

“பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள பிள்ளையான் தொடர்பில் கடந்த காலங்களில் சிங்கள பௌத்தவாதம், தேசியவாதம் பற்றி பேசிக்கொண்டிருந்த உதய கம்மன்பில தற்போது பேசுகிறார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியாக பிள்ளையானை மாற்றியமைக்க அரசாங்கம் முயற்சிப்பதாக உதய கம்மன்பில சொல்லிக்கொண்டு திரிகிறார். குண்டுத்தாக்குதல் விவகாரத்துக்காக பிள்ளையான் கைது செய்யப்படவில்லை.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் ஒருவரை கடத்தி காணாமலாக்கிய குற்றச்சாட்டின் விசாரணைகளுக்கு அமைவாகவே முன்னாள் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் (பிள்ளையான்) பயங்கரவாத தடைச் சட்டத்தின் பிரகாரம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிள்ளையான் 2015 முதல் 2020ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சிறையில் இருந்தார். 2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலுக்கும் அவருக்கும் தொடர்பில்லை என்று உதய கம்மன்பில குறிப்பிடுகிறார்.

பிள்ளையான் கைது செய்யப்பட்ட விவகாரத்தில் உதய கம்மன்பில ஏன் முந்திக்கொள்கிறார். கம்மன்பில திணறாமல் சற்று அமைதியுடன் இருக்க வேண்டும். பிள்ளையான் தேசிய வீரன் என்று உதய கம்மன்பில குறிப்பிடுகிறார். இதனை ஏற்றுக்கொள்வதா?”- என அமைச்சர் கேள்வி எழுப்பினார். (எ)



# இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

மட்டக்களப்பில் இளம் குடும்பஸ்தர் பலி!

மட்டக்களப்பு, ஏப். 20

மட்டக்களப்பு - சந்திவெளி பிரதேசத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்தில் பலியானதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

விபத்தில் சந்திவெளி பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தார்.

ஒரே மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த மூவர் காயமடைந்துள்ளனர்.

மேலும், விபத்தில் காயமடைந்த இரண்டு பேர் தலைமறைவாகியுள்ளதாகவும் பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

விபத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் பலத்த சேதமடைந்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பௌத்த மதவாதத்தின் ஊடாக அரசியல் செய்யும் அநுரகுமார

சாணக்கியன் சாடல்

மட்டக்களப்பு, ஏப். 20

பௌத்த மதவாதத்தின் ஊடாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அரசியல் செய்கிறார் என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

கடந்த ஆட்சியில் மகிந்த மற்றும் அவரது சகாக்கள் விகாரைகள் மற்றும் புத்த பிக்குகளிடம் சரணடையும் போது, குண்டர்கள் தங்கள் பிழைகளை மறைக்க ஓடி ஒளியும் இடம்தான் இவ்வாறான மதஸ்தானங்கள் என்று தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார கூறியிருந்தார்.

ஆனால், அவர் தற்போது புத்தரின் புனித சின்னங்களை காட்சிப்படுத்தும் முக்கிய நிகழ்வுகளில் முன்னிலை வகிக்கின்றார். ஆனால், எமது நாட்டின் முக்கிய பிரச்னைகளை மூடி மறைப்பதில் ஜனாதிபதி அநுர தற்போது கவனம் செலுத்துகின்றார்- என்றும் சாணக்கியன் சாடியுள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் சார்பில் மட்டக்களப்பு ஏறாவூர் நகர சபையில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அறிமுக கூட்டமும் தேர்தல் பிரசார கூட்டமும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# நாய் மீது மோதிய மோ. சைக்கிள் சாரதி உயிரிழப்பு, இருவர் காயம்

கேகாலை, ஏப். 20

கேகாலை மாவனெல்லை - ஹெம்மாத்தகம வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் பெண் உட்பட இருவர் காயமடைந்துள்ளதாக மாவனெல்லை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் பயணித்தபோது நாய் மீது மோதி கவிழ்ந்தது. அத்தோடு, பெண் பாதசாரி மீது மோதி பின்னர் அருகிலிருந்த கொங்கிரீட் கல்லில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளின் பின்புறத்தில் அமர்ந்திருந்த நபரும் வீதியில் பயணித்த பெண்ணும் காயமடைந்துள்ள நிலையில் மாவனெல்லை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்த நிலையில், மோட்டார் சைக்கிளின் சாரதி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் மாவனெல்லை பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயது இளைஞன் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாவனெல்லை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# தேர்தல் சட்டங்களுக்கு முரணாக செயல்படுகிறார் ஜனாதிபதி அநுர

ஐக்கிய மக்கள் சக்தி விசனம்

கொழும்பு, ஏப். 20

தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறாத உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கப்படாது என ஜனாதிபதி அநுரகுமார குறிப்பிடுவது சட்டத்துக்கு முரணான தாகும். இது தொடர்பில் [illegible] திகளை வெளியிடும் ஊடகங்க[illegible] கின்றார் என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் வருண தீப்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளையானின்...

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் பிள்ளையானை பார்வையிடுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். எனினும் அவர்களது கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து, பிள்ளையானின் சட்டத்தரணி என்று கூறி கம்மன்பில பிள்ளையானைச் சந்தித்துள்ளார். ரணிலும் ஒரு சட்டத்தரணி தான் என்றாலும், அவர் அவ்வாறு முயற்சிக்கவில்லை.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பிள்ளையான் முன்னாள் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் ரவீந்திரநாத் படுகொலைச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டிருப்பினும், விசாரணைகளில் அவரிடம் இருந்து பல்வேறு தகவல்கள் அம்பலமாகியுள்ளன.

இதன்படி, உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுடன் பிள்ளையானுக்கு தொடர்பிருக்கின்றமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன - என்றார். (அ)

## நான்காவது...

வங்கியின் அதிகாரிகள் அடங்கிய குழு பேச்சுவார்த்தைகளில் பங்கேற்க அமெரிக்காவுக்குச் சென்றுள்ளது.

இதனை பிரதி நிதியமைச்சர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ உறுதிப்படுத்தியுள்ளார்.

முன்னதாக மூன்று மதிப்பாய்வுகளில் இலங்கை தேர்ச்சிப் பெற்று சர்வதேச நாணய நிதியத்தின் நிதியளிப்பையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இனவிடுதலை...

நினைவுரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நல்லூர் வட்டாரக்கிளைத் தலைவி குணலக்சுமி குலவீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் அருள்செல்வி கனகராசா நினைவுச் சுடரினை ஏற்றிவைத்தார்.

அகவணக்கம், மலர்மாலை அணிவித்தல், மலரஞ்சலி என்பவற்றைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, கட்சியின் கிளிநொச்சி மாவட்டக்கிளைச் செயலாளர் வீரவாகு விஜயகுமார், கரைச்சி பிரதேச சபையின் மேனாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், போராளிகள் நலன்புரிச்சங்க உறுப்பினர் செல்வரட்ணம் தனுபன் ஆகியோர் நினைவுரைகளை ஆற்றியிருந்தனர்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை உறுப்பினர்கள், வேட்பாளர்கள், செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பிரிட்டன்...

அலுவலகம் முன்பாக இடம்பெற்றது.

ஈழத்தமிழ் மக்களின் விடுதலைக்காக தன்னலமின்றி தன்னை அர்ப்பணித்த அன்னை பூபதியின் தியாகத்தை நினைவுகூரும் வகையில், இந்நிகழ்வு நடத்தப்பட்டது.

உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள், ஈழத்தமிழருக்கான சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும், இலங்கையில் நடைபெற்ற தமிழின அழிப்பிற்கு நீதி கோரியும் முழக்கங்களை எழுப்பினர்.

போராட்டத்தின் மூலம், பிரித்தானிய அரசின் கவனத்தை ஈர்த்து, சர்வதேச மேடைகளில் தமிழருக்கான உரிமை விவகாரம் மீண்டும் பேசப்பட வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

இந்த போராட்டத்தில், இங்கிலாந்தில் வாழும் தமிழர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். (அ)

## ஜனாதிபதியின்...

வடக்குக்குச் சென்ற ஜனாதிபதி, தமிழ் மக் களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதை நோக்க மாகக் கொண்டே உரை யாற்றியுள்ளார். அவரின் உரை தமிழ்க் கட்சி யினருக்குத் தேர் தல் தோல்விப் பயத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனால் அவர்கள் உளறுகின்றார்கள். தமிழ் மக்களின் எமக்கான ஆதரவைத் தமிழ்க் கட்சியினரால் தடுத்து நிறுத்த முடியாது.

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவோ அல்லது அவர் தலைமையி லான தேசிய மக்கள் சக்தி கட்சியினரோ ஒருபோதும் இனவாத, மதவாத அரசி யலை ஆதரிக்கமாட்டார்கள்.

இனவாதத்தையும் மதவாதத்தையும் வைத்துத்தான் வடக்கிலும், தெற்கிலும் கடந்த காலங்களில் அரசியல் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதற்கு முடிவு கட்டும் வகையிலேயே தேசிய மக்கள் சக்தியை நாட்டு மக்கள் ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள்.

வடக்கில் திஸ்ஸ விகாரையை வைத்து இனவாத அரசியலை முன்னெடுக்க எமது அரசு ஒருபோதும் அனுமதிக்காது.

மத்தியில் ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி, உள்ளூராட்சி சபைகளிலும் ஆட்சி அமைத்தால் அது நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் நன்மைகளை ஏற்படுத்தும். ஏனெனில் ஊழல், மோடி இல்லாத ஒரே கட்சி தேசிய மக்கள் சக்தியே.

இதை எமது ஜனாதிபதியும் எமது கட்சி உறுப்பினர்களும் வெளிப்படையாகச் சொல்வதில் என்ன தவறு இருக்கின்றது? - என்றார். (அ)

## இனவாதம்...

இக்கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு, தெற்கு, மலையகம் என வெவ்வேறாக கடந்த காலங்களில் மக்கள் பிரிந்தனர்.

ஆனால் கடந்த தேர்தலின்போது மக்கள் இந்நிலைமையை மாற்றியமைத்தனர். அனைவரும் தேசிய மக்கள் சக்திக்கு பின்னால் திரண்டனர்.

எனவே, அனைத்து மக்களையும் சமமாக நடத்தக்கூடிய அரசாங்க மொன்றே தேவை. அவ்வாறானதொரு அரசாங்கமே தற்போது ஆட்சியில் உள்ளது.

இந்நாட்டில் மீண்டும் இனவாதம் தலைதூக்க இடமளிக்க மாட்டோம். இனவாதத்தை தோற்கடிப்பதற்கு நாட்டில் தற்போதுள்ள சட்டங்கள் போதவில்லையெனில் புதிய சட்டங் களை இயக்கியாவது இனவாத அரசியல் தோற்கடிக்கப்படும். எமது நாட்டின் பொருளாதாரத் துக்கு மலையக மக்கள் பெரும் பங்களிப்பு வழங்குகின்றனர். தமது உயிரைக்கூட இந்நாட்டின் மண்ணுக்காக உரமாக்கியுள்ளனர். எனவே, இலங்கை அவர்களின் நாடு அல்ல என எப்படி கூற முடியும்.

நாட்டில் பிறந்து, வளர்ந்து, இறக்கின்றனர் எனில் அவர்கள் எங்கிருந்து வந்து எனக் தேடிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை. மலையக மக்கள் இங்கு வந்து 200 வருடங்கள் கடந்துவிட்டன.

தற்போது அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என தேடுவதில் என்ன பயன் உள்ளது?.

எனவே, மலையக மக்களுக்கு உரிமை இல்லை எனக் கூறும் உரிமை கிடையாது. அனைவரினதும் உரிமைகளை ஏற்கும் அரசாங்கம் தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. எமது நாட்டில் மக்களுக்கிடையில் மீண்டும் போர் ஏற்படாத வகையிலான நாடொன்றை நாம் கட்டியெழுப்புவோம்.

எதிர்வரும் சிறுபோக காலத்தில் நெல் வயல்களில் பயரிடப்படும் மேலதிக பயிர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான காணி பிரச்னைகளையும் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

### இந்தியாவின் அதிருப்தியை அடுத்து

# இலங்கை - பாகிஸ்தானிய கடற்படை பயிற்சி இரத்து

கொழும்பு, ஏப். 20



திருகோணமலையின் கடற்பரப்பில், பாகிஸ்தான் மற்றும் இலங்கை கடற்படைகளுக்கு இடையே, பயிற்சி ஒன்றை நடத்தும் திட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சில வாரங்களுக்கு முன்னர், புதுடில்லி கொழும்பில் இந்த விடயம் தொடர்பில் வெளியிட்ட அதிருப்தியை அடுத்தே, குறித்த பயிற்சி இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

இரண்டு நாடுகளின் கடற்படைகளும் அவற்றின் வழக்கமான தொடர்புகளுக்கு ஏற்ப, திருகோணமலையில் இந்தப் பயிற்சியை மேற்கொள்ள திட்டமிட்டிருந்தன.

எனினும், இந்தப் பயிற்சி குறித்த தனது அச்சங்களை இந்தியா இலங்கைத் தரப்புக்கு தெரிவித்த பின்னர், இந்தத் திட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியின் கொழும்பு வருகைக்கு சில வாரங்களுக்கு முன்னதாகவே இந்தக் கூட்டுப் பயிற்சி திட்டமிடப்பட்டிருந்தது.

இந்தநிலையில் குறித்த பயிற்சி இரத்துச் செய்யப்பட்டமை குறித்து, இலங்கை அல்லது பாகிஸ்தானிடமிருந்து எந்த அதிகாரப்பூர்வ தகவலும் வெளியாகவில்லை.

பாகிஸ்தான் கடற்படை சீனாவின் பி.எல்.ஏ கடற்படையுடன் நெருக்கமான ஒத்துழைப்புடன் செயற்படும் நிலையில், பாகிஸ்தான் போர்க்கப்பல்கள் திருகோணமலைக்கு வருகை தருவது குறித்து புதுடில்லி கவலை கொள்ள காரணங்கள் உள்ளன என்று பாதுகாப்பு நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

## வடக்கு...

அம்மான் மற்றும் பிள்ளையான் வெளியேறியதால் தான் தமிழீழ விடுதலைப் புலி கள் அமைப்பு வீழ்ச்சியடைந்தது.

வேலுப்பிள்ளை பிரபாகரன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போராட்டங்களுக்கு தலைமை வகிக்கவில்லை.

விஜேவீரவைப் போன்று அவரும் தலைமறைவாகவே இருந்தார்.

இந்நிலையில் போராட்டத்தை வழிநடத்திய ஒருவதே கருணா அம்மான். அவரது மிக முக்கிய சகாவாக பிள்ளையான் இருந்தார். ஆனையிறவு உட்பட 14 இராணுவ முகாம்களை சுமார் 4 நாட்களில் புலிகள் அழித்தனர்.

இந்த அனைத்து தாக்குதல்களையும் கருணா அம்மானே மேற்கொண்டார்.

கருணா அம்மானின் மாற்றத்தினாலேயே கிழக்கு மாகாணத்தை புலிகள் இழந்தனர்.

கருணா இருந்திருந்தால் இராணுவத்தினரால் ஒருபோதும் தொப்பிகலவை கைப்பற்றியிருக்க முடியாது.

இந்திய இராணுவம் கூட தொப்பிகலவுக்குச் செல்ல அஞ்சியது.

கருணா அம்மான் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே தொப்பிகலவையும் கைப்பற்ற முடிந்தது.

கருணா அம்மான் மற்றும் பிள்ளையான் புலிகளிலிருந்து பிரிந்த பின்னரே என்றுமே கைப்பற்றப்ப முடியாது என பிரபாகரன் சவால் விடுத்திருந்த தோரா போரா மலையைக் கூட கைப்பற்ற முடிந்தது. அது மாத்திரமின்றி கிழக்கு இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பின்னரே ஆயுத பரிமாற்றமும் நிறுத்தப் பட்டது.

எதிர்காலத்தில் தாம் பாதுகாக்கப்படுவோம் என்று நம்பியே கருணாவும் பிள்ளையானும் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினர். அவ்வாறிருக்கையில் அரசாங்கம் அவர்களைக் காட்டிக் கொடுத்தால் அது நியாயமற்றது.

இதன் ஊடாக வடக்கு புலம்பெயர் தமிழர்கள் ஊடாக தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

கருணா மற்றும் பிள்ளையான் கைது செய்யப்படுவது புலம்பெயர் ஈழத் தமிழர்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகும். இதனை நோக்கமாகக் கொண்டே அரசாங்கம் இந்த நாடகத்தை அரங்கேற்றியிருக்கிறது. கருணா, பிள்ளையான் கொல்லப்படும் நாளே புலம்பெயர் ஈழத்தமிழர்கள் மிகவும் மகிழ்ச்சியடையும் நாளாகும்.

கலாநிதி என்.எம்.பெரேரா கூறியதைப் போன்று இன்று எதிரியின் எதிரி நண்பனாகியிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் எதிரி கருணா அம்மான். கருணா அம்மானின் எதிரி புலம் பெயர் ஈழத்தமிழர்கள். புலம்பெயர் ஈழத்தமிழர்களின் நண்பன் ஜே.வி.பி. ஆகும்.

இது வரலாற்று பேரழிவுக்கு வழிவகுக்கும் - என்றார். (அ)

## ஜனாதிபதி...

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த மைத்ரி குணரத்ன-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் வாக்களிக்கக்கூடும் என தற்போது அரசாங்கத்துக்குப் புலனாய்வு அறிக்கைகளின் ஊடாக தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

அதன் காரணமாகவே ஜனாதிபதி தற்போது தேர்தல் மேடைகளில் எல்லாம், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் திசைக்காட்டிக்கு அதிகாரம் வழங்கப்படாவிட்டால், அந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படாது என தேர்தல் விதிகளை மீறும் வகையில் கருத்துக்களை முன்வைத்து வருகின்றார்.

ஜனாதிபதியின் இந்த கருத்து சட்டத்திற்கு முரணானது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும், அந்த உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கட்டாயமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். எனவே ஜனாதிபதியின் இந்த கருத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம் - என்றார். (அ)

## அமெரிக்கா...

திகதி நடைபெறும் என தொழிலாளர் அமைச்சரும் பொருளாதார மேம்பாட்டு பிரதி அமைச்சருமான பேராசிரியர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தையில் இலங்கைத் தூதுக் குழுவினர் அமெரிக்க வர்த்தக பிரதிநிதியை சந்திப்பார்கள் எனவும் அமெரிக்காவுடனான முதலீடு மற்றும் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடல்களில் கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று அன்னை பூபதியின் நினைவேந்தல்



யாழ்ப்பாணம், ஏப். 20

இந்திய படைகளின் ஆக்கிரமிப்பிற்கு, எதிராக 31 நாட்கள் உண்ணா நோன்பிருந்து தாயக விடுதலைக்காக உயிர் நீத்த அன்னை பூபதியின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் நினைவேந்தல் இடம்பெற்றது.

இதன்போது அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கு சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மேலும் அன்னை பூபதி தொடர்பான நினைவுரையும் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் நினைவேந்தலில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (அ)

## அவதூறு, பாசாங்கு ஊடாக நாட்டை முன்னேற்றமுடியாது

### திலித் ஜயவீர கூறுகிறார்



கொழும்பு, ஏப். 20

அவதூறு, பாசாங்கு மற்றும் பொறாமையின் அடிப்படையில் மற்றொரு நபரை அவமதித்து அரசியலில் ஈடுபடுவதன் மூலம் ஒரு நாட்டை முன்னோக்கி நகர்த்த முடியாது என்று சர்வஜன அதிகாரத்தின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்தார்.

சர்வஜன அதிகாரத்தின் ஜா-எல தொகுதிக்கான வேட்பாளர்கள் கூட்டம் நேற்று மாபோல பகுதியில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர, உலகெங்கிலும் உள்ள வளர்ந்த நாடுகள் பயன்படுத்தும் தொழில்முனைவோர் கருத்துக்களைப் பின்பற்றினால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும்.

நாம் ஒரு நாடாகவும், ஒரு தேசமாகவும் குரல் கொடுக்க வேண்டும், நாம் ஒன்றாக இருக்கிறோம் என்று சொல்ல வேண்டும். நமக்கு எந்த மதங்கள், இனங்கள் அல்லது இனங்கள் இருந்தாலும், நாம் ஒன்றாக இருக்கி றோம்.

இந்த தேர்தலுக்குப் பிறகு நாங்கள் தொடங்கவிருக்கும் சர்வஜன சபைகள் மூலம், உங்கள் கிராமத்தில் நீங்கள் உணரக்கூடிய மாற்றத்தையும், நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் உங்கள் தொகுதியில் உள்ள மக்களும் உணரக்கூடிய மாற்றத்தையும் நாம் உருவாக்க முடியும் என்று நம்பிக்கையுடன் கூற முடியும்."

அவர்கள் உங்களை மதிக்கும் வகையில் நாம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும். நாம் அதை உதாரணமாகச் செய்ய வேண்டும். அப்போதுதான் இந்த நாடு மீண்டு எழ முடியும். "இந்த நாட்டை முன்னேற்ற வேறு வழிகள் இல்லை.

பாசாங்குத்தனத்தின் மூலமும், பொறாமையின் அடிப்படையில் மற்றவர்களை அவதூறு செய்வதன் மூலமும் அரசியல் செய்வதன் மூலம் ஒரு நாடு முன்னேறாது.

ஒரு நாடு முன்னேற வேண்டுமென்றால், உலகெங்கிலும் உள்ள வளர்ந்த நாடுகள் பயன்படுத்திய தொழில் முனைவோர் மனநிலையுடன் செயல்படுவதே எமது எண்ணக்கரு என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் - என்றார். (அ)

# ராஜபக்ஷக்களின் முகவராகவே கம்மன்பில பிள்ளையானுக்காக முன்னிலையாகின்றார்!

## முன்னிலை சோசலிசக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 20

**"கடத்தல் சம்பவம் தொடர்பில் பிள்ளையான் கைதுசெய்யப்பட்டுள்ளமை ராஜபக்ஷக்களுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனால்தான் ராஜபக்ஷக்களின் முகவராக பிள்ளையானுக்காக கம்மன்பில முன்னிலையாகியுள்ளார்." என்று முன்னிலை சோசலிசக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.**

இது தொடர்பில் முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளரான புபுது ஜயகொட கூறியவை வருமாறு-

கடத்தல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுடன் ராஜபக்ஷ ஆட்சிக்கு தொடர்புள்ளது என்பதை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்திவந்தோம். எமது கட்சி தோழர்களான லலித், குகன் ஆகியோர் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடனும் ராஜபக்ஷக்களுக்கு தொடர்புள்ளது.

இது தற்போது நிரூபணமாகி வருகின்றது. கடத்தல் விவகாரம் தொடர்பிலேயே பிள்ளையான் கைது செய்யப்பட்டுள்ளார். இது ராஜபக்ஷக்களுக்கு நடுக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ராஜபக்ஷக்களின் முகவராகவே பிள்ளையானின் சட்டத்தரணியாக கம்மன்பில செயற்படுகின்றது. ராஜபக்ஷ மற்றும் பிள்ளையானுக்கிடையிலான தொடர்பாடலை ஏற்படுத்துவதே கம்மன்பிலவின் பணியாகும்.

உதய கம்மன்பில அண்மைக் காலங்களில் சட்டத்தரணியாக பெரிதாக செயற்படவில்லை. அப்படி இருக்கையில் தனது சட்டத்தரணியாக பிள்ளையான் அவரை தேர்வு செய்ததன் நோக்கம் தெளிவாகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவும் பிள்ளையானுடன் கதைப்பதற்கு அனுமதி கோரியுள்ளார். ரணில் விக்கிரமசிங்க என்பவரும் ராஜபக்சக்களின் அவதாரம் என்பது புரிகின்றது - என்றார். (அ)

# உள்ளூராட்சி சபைகளுக்கான நிதி; தனது உரை குறித்து அநுர விளக்கம்

கொழும்பு, ஏப். 20

தேர்தலுக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவின் அண்மைய கருத்து பெரும் பேசுபொருளாக மாறியதைத் தொடர்ந்து அனைவரின் கவலைக்கும் அவர் பதிலளித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் கட்டுப்பாட்டில் இல்லாத உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிதி ஒதுக்கப்படாது என்று தான் ஒருபோதும் கூறவில்லையென ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நுவரெலியாவில் இடம்பெற்ற பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் நேற்று சனிக்கிழமை இதனைத் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கும் கொள்ளையடிக்கப்படுவதற்கும் நிதி ஒதுக்கப்படாது என்பதையே தான் கூறியதாக அவர் தெளிவுபடுத்தினார்.



உள்ளூராட்சி மன்ற கொள்கையைப் பின்பற்றாமல் நிதியை தவறாகப் பயன்படுத்தி கொள்ளையடிப்பதைஅ னுமதிக்க முடியாது என்றே நான் கூறினேன் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# உணவுத் தட்டுப்பாட்டை ஈடு செய்யமுடியாத நிலை

## தேசிய விவசாய ஒற்றுமை அமைப்பு

கொழும்பு, ஏப். 20

அரசாங்கத்தின் நெல் கொள்முதல் செயல்முறை முற்றிலும் தோல்வியுற்றுள்ளதாக தேசிய விவசாய ஒற்றுமை அமைப்பின் தலைவர் அநுராத தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தின் நெல் கொள்முதல் செயல்முறை முற்றிலும் தோல்வியுற்றுள்ளது. 2024/2025 கடந்த போகத்தில் ஐம்பது இரண்டு விவசாயிகள் மாத்திரமே நெல்லை அரசாங்கத்திடம் விற்பனை செய்துள்ளனர்.

அந்த வகையில் நோக்கும் போது பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்னவின் குருணாகல் மாவட்டத்தில் ஆறு விவசாயிகள் 4500 கிலோகிராம் நெல்லையே விற்றுள்ளனர்.

வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர் வசந்த சமரசிங்கவின் அனுராதபுரம் மாவட்டத்தில் மூன்று விவசாயிகள் 2661 கிலோ நெல்லை விற்றுள்ளனர்

அரிசிக்கு நாட்டில் தட்டுப்பாடு ஏற்படும் நிலை காணப்படுகின்றது. இத்தகைய பின்னணியில் அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து 31 562 வெள்ளை அரிசியையும் , 19 272 கிலோகிராம் சிவப்பு அரிசியையும், 1451 கிலோகிராம் சம்பா அரிசியையும் , 1297 கிலோ கீரிச் சம்பா அரிசியையுமே கொள்வனவு செய்துள்ளது.

எதிர்கால உணவுத்தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு சிறிய அளவு அரிசியையே அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்துள்ளது. இதன் ஊடாக நாட்டு மக்களின் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையே காணப்படுகின்றது - என்றார். (அ)

# முதலாளித்துவ வழியில் பயணிக்கின்றது அரசு!

## சுஜீவ சேமசிங்க சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 20

கொள்கைகளை மாற்றிக்கொள்ளும் அரசாங்கமாக இந்த அரசாங்கம் உள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியதாக தெரியவில்லை.அத்தியாவசிய பொருட்களுக்கு வற் வரியை நீக்குவதாக அரசாங்கம் கூறியது. அதேபோன்று மேலும் பல வாக்குறுதிகளை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வழங்கியது.

அரசாங்கத்திடம் கடனை மீள செலுத்தும் விடயத்தில் ஒரு திட்டமிடல் இன்மையே காணப்படுகின்றது.நாட்டில் உற்பத்தி இடம்பெறாத பட்சத்தில் 2028 ஆம் ஆண்டாகும் போது மீண்டும் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படும்.

அனைத்து விடயங்களுக்கும் எதிர்ப்பை தெரிவித்த தரப்பினர் தற்போது முதலாளித்துவத்தை



கையில் எடுத்துள்ளனர். சீனா அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் கேட்கும் அனைத்து விடயங்களையும் வழங்கும் அரசாங்கமாக உள்ளது. கொள்ளைகளை மாற்றிக்கொள்ளும் தரப்பினராகவே இந்த அரசாங்க தரப்பினர் உள்ளனர் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org